பக்கங்கள்:-27

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆனி 30 | ஞாயிற்றுக்கிழமை | 15.09.2024 | அதிர்வு 044

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு

## ரூ. 350 ஐயும் நிச்சயம் பெற்றுகொடுப்போம்!

**இ.தொ.கா. உறுதி**



பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 1350 ரூபா சம்பள உயர்வை 06




# சகல தமிழ்க் கட்சிகளும் ரணிலுடன் கள்ள உறவு

## வெளியிலே வேறு முகம் காட்டுகின்றனவாம் என்று குற்றஞ்சாட்டுகிறார் அமைச்சர் டக்ளஸ்

"அனைத்து தமிழ்க் கட்சிகளும் ஏதோ வொரு வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவுடன் உறவை வைத்துள்ளன. எதிர் வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமது ஆத் மார்த்த ஆதரவு அவருக்குத்தான் என அந் தக் கட்சியினர் ஜனாதிபதியிடம் கூறி வருகின் றனர். ஆனால், அவர்கள் வெளியில் வேறு முகத்தைக் காட்டுகின்றனர்."

– இவ்வாறு ஈ.பி.டி.பியின் தலைவரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரி வித்தார். 06




ஐக்கிய மக்கள் சக்தியைத் தோற்கடிக்க

# ரணில் - அநுர கும்பல் இரவு பகல் பாராது சதி

## பரப்புரையில் சஜித் குற்றச்சாட்டு



"இன்று மக்கள் தெளிவான முறையில் தீர்மானம் எடுக்கும் நிலையில் இருக்கின்றார்கள். நாட்டை அழிவின் பக்கம் இட்டுச் செல்லும் ரணில் – அநுர கூட்ட மைப்புக்கு ஆதரவு வழங்குவதா? இல்லாவிட்டால் 220 இலட்சம் மக்களையும் ஆட்சிப்பீடமேற்றும் பொதுமக்களின் யுகத்துக்கு மக் கள் வரத்தை வழங்குவதா? என்று மக்கள் தீர்மானிக்க 06




இலங்கைத் தமிழர சுக் கட்சியின் நிலைமை அந்தோ பரிதாபம் என்ற மாதிரி உள்ளது.

கட்சியின் மூத்த பிர முகர்கள் தங்களுக்குள் முரண்பட்டு இழுபறிப் பட்டு நிற்கின்றமை இரண்டாவது விடயம்.

கட்சித் தலைவர் பதவியில் ஒரு தசாப்த காலம் குந்தி இருந்து கொண்டு கட்சி யின் செயற்பாடுகளை குழப்பியடித்து வரும் 'சணம் பித்தம், சணம் வாதம்' போக்குடைய தலைவரின் சில்லெடுப்புத் தாங்க முடியாது அடுத்த மட்டப் பிரமுகர்கள் அல்லாடுகின் றனர். அதுதான் பெரும் பிரயத்தனமாக உள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் பிரச்சாரத்துக்கு இன்னும் ஆக மூன்று நாள்கள்தான் உள்ள. ஏற்கனவே கட்சியின் மத்திய குழு நான்கு தடவைகள் கூடி ஜனாதிபதித் தேர்தல் 06



# யாழ். மாவட்ட மக்கள் சிலிண்டர் சின்னத்தை வெல்ல வைப்பார்கள்!

## முன்னாள் மாநகர மேயர் யோகேஸ்வரி ஆரூடம்

ஜனாதிபதித் தேர்தலில் எமது யாழ்ப்பாணம் மாவட்ட மக்கள் சிலிண்டர் சின்னத்தை வெல்ல வைப்பார்கள் என்பது உறுதி என்று முன்னாள் யாழ். மாநகர மேயர் யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் - நாவாந்துறை சென் மேரிஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று சனிக்கிழமை "ரணிலால் இயலும்" என்ற தொனிப்பொருளில் பிரசாரக் கூட்டம் நடைபெற்றது. இதில் உரையாற்றும்போதே யோகேஸ்வரி பற்குணராசா மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

"சர்வதேச சமூகத்துடன் கைகோர்த்து நாட்டை மீட்டெடுக்கும் துணிச்சலான தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஒருவர்தான். நாட்டை அவர் பொறுப்பேற்றபோது நாடு வங்குரோத்தடைந்திருந்தது. திறைசேரி காலியாக இருந்தது. எமது பொருளாதாரத்துக்கு வெளிச்சம் தந்தவர் அவர்தான். எமது யாழ்ப்பாணம் மாவட்ட மக்கள் சிலிண்டர் சின்னத்தை வெல்ல வைப்பார்கள் என்பது உறுதி.

நெருக்கடி நிலையிலும் இலவசமான மண்ணெண்ணெய், படகு, வலை என்பவற்றை வழங்குவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுத்தார். இதற்கு எமது கட்சியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா முன்னின்று செயற்பட்டார். பல இந்துக் கோயில்கள் விடுவிக்கப்பட்டுள்ளதோடு அங்கு சென்று வழிபட வழியமைக்கப்பட்டுள்ளது. ஏனைய மதத்தவர்கள் சுதந்திரமாக தமது மதத்தை வழிபட ஜனாதிபதி வழியமைத்துக் கொடுத்தார்." - என்றார்.

# ஏற்றுமதி செயலாக்க வலயத் திறப்பு விழா தேர்தல் விதிமுறை மீறல் என முறைப்பாடு

(ந.லோகதயாளன்)

தேர்தல் விதிமுறைகளை மீறி யாழ்ப்பாணம் காங்கேசன்துறை மற்றும் பரந்தன் பகுதிகளில் ஏற்றுமதி செயலாக்க வலயத் திறப்பு விழா இடம்பெற்றமை தொடர்பில் தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களிடம் முறையிடப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை மற்றும் பரந்தன் பகுதியில் நேற்று முன்தினம் இரு ஏற்றுமதி செயலாக்க வலயங்கள் திறந்து வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வுகளில் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் திலிம் அமுனுகம, வடக்கு மாகாண ஆளுநர் பி.எம்.எஸ். சாள்ஸ் ஆகியோருடன் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் பிரதிநிதிகளும் வடக்கு மாகாண சபையின் உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

தேர்தல் காலத்தில அரச நிதியில் மேற்கொள்ளும் எந்த திட்ட நிகழ்வுகளும் தேர்தல்கள் ஆணைக் குழுவின் அனுமதியின்றி இடம்பெற முடியாது என்பதோடு அவ்வாறு இடம்பெறும் நிகழ்வுகளில் அரச அதகாரிகள் கலந்துகொள்ள முடியாது என்பது தேர்தல்கள் விதியாகவுள்ளது.

இருந்தபோதும் நேற்று முன்தினம் இடம்பெற்ற திறப்பு விழாவில் வடக்கு மாகாண சபையின்

பிரதிப் பிரதம செயலாளர் (திட்டமிடல்) கிருபாசுதன், உள்ளூராட்சி அமைச்சுச் செயலாளர் பிரணவநாதன், யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சிறிவர்ணன் ஆகியோரும் பங்கு கொண்டிருந்தனர்.

இதேநேரம் இந்த விதிமுறை மீறலான திறப்பு விழா தொடர்பில் மாவட்ட அரச அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான உத்தியோகத்தருக்கு இரு தினங்களின் முன் கூட்டியே நிகழ்வு தொடர்பில் எழுத்தில் அறிவிக்கப்பட்டபோதும் அதனை அவர் தடை செய்யவில்லை எனவும் முறைப்பாட்டில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

# மட்டக்களப்பு வவுணதீவில் ஓட்டோ தீப்பற்றி எரிந்தது







(பழுவூரான்)

மட்டக்களப்பு வவுணதீவிலிருந்து விளாவெட்டுவானுக்குச் செல்லும் வீதியில் வாகனக் கோளாறினால் நேற்று மாலை ஒன்று ஓட்டோ தீப்பற்றி எரிந்தது.

இதனால் அப்பகுதி மக்களிடையே இனம் புரியாத பயமேற்பட்டதை அவதானிக்க முடிந்தது.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுணதீவுப் பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.





# அநுரகுமாரவையும் சஜித்தையும் ஓட ஓட விரட்டியடிக்க வேண்டும்!

## யாழ். நாவாந்துறை பிரசாரக் கூட்டத்தில் திலீபன் எம்.பி. வலியுறுத்து

“அன்று ஓடி ஒழிந்து விட்டு இன்று ஆட்சியைக் கோரும் அநுரகுமாரவையும் சஜித்தையும் ஓட ஓட விரட்டியடிக்க வேண்டும். நாம் அளிக்கும் புள்ளடிதான் அதற்கான ஒரே வழி.”

– இவ்வாறு ஈ.பி.டி.பியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் குலசிங்கம் திலீபன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் – நாவாந்துறை சென் மேரிஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று சனிக்கிழமை “ரணிலால் இயலும்” என்ற தொனிப்பொருளில் பிரசாரக் கூட்டம் நடைபெற்றது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் உரையாற்றும்போதே திலீபன் எம்.பி. மேற் கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

“நாம் நன்றி மறந்தவர்கள் அல்லர். பால்மாவுக்கும் காஸ்க் கும் மண்ணெண்ணெய்க்கும் வீதி வீதியாக வரிசையில் நின்றதை மறக்க வேண்டாம்.

அநுரகுமாரவைப் போன்று பஸ்களில் சனத்தைச் சேர்க்கும் கூட்டமல்ல இது. ரணில் விக்கிரமசிங்கவை வெல்ல வைப் பதற்கான உண்மையான நன்றிக் கடனுள்ள கூட்டம் இது. அன்று ஓடி ஒழிந்து விட்டு இன்று ஆட்சியைக் கோரும் அநுரகுமாரவையும் சஜித்தையும் ஓட ஓட விரட்டியடிக்க வேண்டும். நாம் அளிக்கும் புள்ளடிதான் அதற்கான ஒரே வழி.




பங்களாதேஷில் 15 மணி நேர மின்வெட்டு அமுலில் உள்ளது. இங்கு இன்று எதற்காவது தட்டுப்பாடு உள் ளதா? மின்வெட்டு அமுல்படுத்தப்படுகின்றதா? சஜித்தோ, அநுரவோ நாட்டை ஏற்றிருந்தால் அரச ஊழியர்களின் சம்பளம் முற்றாகவோ அல்லது பாதியளவோ குறைக்கப் பட்டிருக்கும். ஆனால், அனைத்து சுமைகளையும் தாங்கி அரச ஊழியர்களுக்கு முழுமையான சம்பளம் வழங்க ஜனாதிபதி நடவடிக்கை எடுத்தார். எனவே, ரணில் விக்கிரம சிங்கவை வெல்ல வைப்போம்.” – என்றார்.





# இரத்தினபுரியில் சஜித்தின் பிரசாரம்





ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு ஐக்கிய மக்கள் கூட்டணி ஏற்பாடு செய்த 52 ஆவது மக்கள் வெற்றிப் பேரணி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் நேற்று சனிக்கிழமை இரத்தினபுரியில் முன்னெடுக்கப்பட்டது. இதில் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டனர்.











# மேல் மாகாணத்தில் வாகன வருமானவரி வழங்கும் அனைத்து பிரிவுகளும் 20 ஆம் திகதி மூடப்படும்

மேல் மாகாணத்தில் வாகன வருமானவரி அனுமதிப் பத்திரம் வழங்கும் அனைத்து பிரிவுகளும் எதிர்வரும் 20ஆம் திகதி மூடப்படும் என மேல் மாகாண சபை தெரிவித்துள் ளது.

ஜனாதிபதித் தேர்தலின் போது தேர்தல் கடமைகளுக் காக உத்தியோகத்தர்களை விடுவிக்க வேண்டியிருப்பதன் காரணமாக குறித்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக குறிப் பிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர், வாகன வருமான வரி அனுமதிப்பத்திரம் பெற வேண்டிய வாகனங்களுக்கு அபராதமின்றி உரிமம் வழங்கப்படும் எனவும் அறிவிக் கப்பட்டுள்ளது.



# மரக்கறிகளின் விலை வீழ்ச்சி

கடந்த நாள்களை விட தற்பொழுது மரக்கறிகளின் விலை சற்று வீழ்ச்சியைப் பதிவுசெய்துள்ளது.

இதன்படி பேலியகொடை மெனிங் சந்தையில் ஒரு கிலோகிராம் கரட் 200 ரூபாவாகவும், ஒரு கிலோகிராம் போஞ்சி 150 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

அத்துடன், ஒரு கிலோ கிராம் வெண்டைக்காய் 180 ரூபாவிற்கும், ஒரு கிலோகிராம் கோவா 2000 ரூபாவிற் கும் விற்பனை செய்யப்படுகின்றன.

மேலும் ஒரு கிலோ கிராம் பாகற்காய் 200 ரூபாவாகவும், ஒரு கிலோ கிராம் பச்சை மிளகாய் 150 ரூபாவாகவும் பதி வாகியுள்ளன.

# தெஹிவளையில் ரயிலில் மோதி ஆண் ஒருவர் சாவு!

தெஹிவளை ரயில் நிலையத்துக்கு அருகில் ரயிலில் மோதி ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று சனிக்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

மருதானையிலிருந்து பெலியத்த நோக்கிப் பயணித்த ரயிலில் மோதியே மேற்படி நபர் உயிரிழந்துள்ளார் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை என்றும் பொலிஸார் மேலும் கூறினர்.

## இரகசியம் பரகசியம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

விவகாரத்தை ஆராய்ந்து, ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் சஜித்தை ஆதரிப்பது எனத் தீர்மானித்து அறிவித்துவிட்டது. அந்த இறுதித் தீர்மானம் எடுக்கப்பட்ட நான்காவது கூட்டத்திற்குத் தான் போகாமல் இருந்துவிட்டு, கட்சியின் முடிவை குழப்பியடித்துக் கொண்டிருக்கிறார் கட்சித் தலைவர்.

அவரது 'சணம் பித்தம், சணம் வாதம்' என்ற தடுமாற்ற போக்கினால் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க முடியாமல் தடுமாறுகின்றார்கள் கட்சியின் அடுத்த மட்டத் தலைவர்கள்.

திடீர் திடீரென சிந்தனை பேதலித்து , அடிக்கடி பேச்சு மாற்றி, ஒவ்வொரு விதமாகக் கதை பேசுகின்றார் தலைவரென அடுத்த மட்டப் பிரமுகர்கள் தங்களுக்குள் பொருமிக் கொள்கிறார்கள்.

நாளை 16ஆம் திகதி இந்த விவகாரம் தொடர்பில் ஆறு பேர் கொண்ட கட்சியின் உயர்மட்டக் கூட்டத்தில் ஆராய்ந்து மக்களை வழிப்படுத்துவதற்கான அறிக்கை ஒன்றை வெளியிடுவதாக ஏற்பாடு.

அதற்காக அறிக்கை தயாரிக்கும் விடயத்திலும் தலைவரின் பிய்ச்சல் பிடுங்கல் தாங்க முடியாததாக இருப்பதாகக் கேள்வி.

கட்சியின் இறுதி முடிவு தொடர்பான டீலில் தாம் இல்லை என்ற விஷயத்தால் அவர் எல்லாவற்றையும் போட்டடித்துக் குழப்புகின்றார் அல்லது குழம்புகின்றார் என்பதுதான் இப்போதுள்ள பிரச்சினை.

இந்தத் தேர்தல் தொடர்பில் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுவின் முடிவை யொட்டிய விடயங்களை மக்களுக்குத் தெளிவுபடுத்துவதற்காக பல்வேறு தரப்பினரும் முன்வைத்த கருத்துக்களை தொகுத்து , ஒரு வெளியீடாக சுமந்திரன் எம்.பி. அடுத்த நான்கு நாள்களும் வடக்கு – கிழக்கு எங்கும் விநியோகிக்க இருக்கின்றார் என்று அறிய வருகின்றது.

அவர்கள் 'சாண் ஏறினால்' கட்சித் தலைவரின் 'சணம் பித்தம், சணம் வாதம்' போக்கினால் விவகாரம் 'முழம் சறுக்கும்' நெருக்கடி இருப்பதாக தெரிகிறது.

பாவம் தமிழரசு கட்சி..... இந்தத் தலைவரின் 'பேதலித்த' மனப் போக்கால் அதன் நற்பெயர் நாறுகிறது...!

## ரூ. 350 ஐயும் நிச்சயம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பெற்றுக்கொடுத்துள்ளசூழலில்அதற்கான வர்த்தமானி பிரதியை களுத்துறையில் இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தில் இ.தொ.காவின் தலைவரும் கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான் வெளியிட்டார்.

ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை களுத்துறையில் பிரசாரத்தில் ஈடுபட்ட போதே அவர் இதனை வெளியிட்டுள்ளார்.

"1350 ரூபா சம்பள உயர்வை இ.தொ.கா. பெற்றுக்கொடுத்துள்ளது. விரைவில் 350 ரூபா கொடுப்பனவையும் பெற்றுக்கொடுப்பதற்கான பேச்சுகளையும் மேற்கொள்ளவுள்ளது. அதனை பெற்றுக்கொடுப்பதில் நாங்கள் உறுதியாக உள்ளோம். 1350 ரூபா சம்பளத்தை விமர்சிப்பவர்கள் எஞ்சியுள்ள 350 ரூபாவைப் பெற்றுக்கொடுக்க முற்பட்டால் அதற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்க இ.தொ.கா. தயாராகவுள்ளது. அதனை விமர்சிப்பவர்கள் பெற்றுக் கொடுக்காமல் மௌனம் காக்கும் பட்சத்தில் அதனை இ.தொ.கா. பெற்றுக் கொடுக்கும்." – என்றும் செந்தில் தொண்டமான் இந்தப் பிரசாரத்தில் சுட்டிக்காட்டினார்.

## ரணில் - அநுர கும்பல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

வேண்டும்."

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் பிரேமதாஸ தெரிவித்தார்.

"இந்த நாடு மீண்டும் அபிவிருத்தியை நோக்கிய யுகத்துக்குச் செல்வதற்கும் தொழிற்சாலைகள் உருவாகி, தொழில் வாய்ப்புகள் கிடைக்கப்பெற்று மக்களின் வறுமை நீங்கி மூலைமுடுக்கு, கிராமங்கள், நகரங்கள், விருத்தியடைந்து நாடு அபிவிருத்தி அடைகின்ற வேலைத்திட்டத்துக்கும் ரணில் – அநுர கூட்டமைப்பு எதிர்ப்புத் தெரிவிக்கின்றார்கள். ரணில் – அநுர கும்பல் இரவு பகல் பாராது ஐக்கிய மக்கள் சக்தியைத் தோல்வியடையச் செய்ய வேண்டும் என்று சூழ்ச்சியில் ஈடுபட்டிருக்கின்றார்கள். இந்தச் சூழ்ச்சிக்குள் நாட்டு மக்கள் சிக்கிக்கொள்ள மாட்டார்கள் என்பதை நாம் அறிந்திருக்கிறோம்." – என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குறிப்பிட்டார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு ஐக்கிய மக்கள் கூட்டணி ஏற்பாடு செய்த 52 ஆவது மக்கள் வெற்றிப் பரணி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் நேற்று சனிக்கிழமை இரத்தினபுரியில் முன்னெடுக்கப்பட்டது. பெருந்திரளான மக்கள் மத்தியில் உரையாற்றும்போது எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

"கட்டுக்கட்டாக பைல்களைத் தூக்கிச் சென்ற ஒரு குழுவினர் திருடர்களை பிடிப்போம் என்று கூறினாலும், ஐக்கிய சட்டத்தரணிகள் சக்தி உயர்நீதிமன்றத்தை நாடி நாட்டை வங்குரோத்தடையச் செய்த ராஜபக்ஷக்களுக்கு எதிராக அடிப்படை உரிமை மீறல் மனுவை தாக்கல் செய்து தீர்வைப் பெற்று, அவர்கள் நீதிமன்றத்தின் முன் குற்றவாளிகள் என வெளிகொணர்ந்தது.

எதிர்வரும் செப்டெம்பர் 21 ஆம் திகதிக்கு பின்னர் இந்தத் தீர்வின் ஊடாக நட்டஈட்டைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்போம்." – என்றார்.

## சகல தமிழ்க் கட்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

யாழ்ப்பாணம் – நாவாந்துறை சென் மேரிஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று சனிக்கிழமை "ரணிலால் இயலும்" என்ற தொனிப்பொருளில் பிரசாரக் கூட்டம் நடைபெற்றது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது. இதன்போது அமைச்சர் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்தும் ஆட்சியில் இருந்தாலே வீழ்ச்சியில் இருந்து மீள முடியும். எதிர்வரும் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கதான் வெல்ல இருக்கின்றார். அந்த வெற்றியில் நாமும் பங்காளராக வேண்டும்.

தமிழ் மக்கள் மத்தியில் பல கட்சிகள் உள்ளன. அனைத்து தமிழ்க் கட்சிகளும் ஏதோவொரு வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் உறவை வைத்துள்ளன. எதிர்வரும் தேர்தலில் தமது ஆத்மார்த்த ஆதரவு அவருக்குத்தான் என அந்தக் கட்சியினர் ஜனாதிபதியிடம் கூறி வருகின்றனர். ஆனால், அவர்கள் வெளியில் வேறு முகத்தைக் காட்டுகின்றனர்.

குறித்த நபருக்குத்தான் ஆதரவளிக்க வேண்டும் என எவரும் ஈ.பி.டி.பி. கட்சிக்குப் பணிக்க முடியாது. ஈ.பி.டி.பி. கட்சி என்ற வகையில் நாம் ஜனாதிபதியை ஆதரிக்க முடிவு செய்துள்ளோம். எப்போதும் மக்கள் நலன் சார்ந்த தனித்துவமான முடிவைத்தான் எமது கட்சி எடுத்து வந்துள்ளது. ஏனைய தமிழ்க் கட்சிகளுக்கு யார் பணிப்புரை வழங்குகிறார்கள் என்பது அனைவருக்கும் தெரியும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெல்வதன் ஊடாகவே நாட்டுக்கு ஒளிமயமான எதிர்காலத்தை வழங்க முடியும். தமிழ் பேசும் மக்களின் அரசியல் சார்ந்த, அபிவிருத்தி சார்ந்த பிரச்சினைகளாக இருந்தாலும் சரி, அவர்கள் எதிர்கொள்ளும்அன்றாடப்பிரச்சினைகளாக இருந்தாலும் சரி அவர் ஊடாகவே சாத்தியமாகும் என நம்புகின்றோம். காணிப் பிரச்சினையாக இருந்தாலும், அரசியல் உரிமையாக இருந்தாலும் அவரால்தான் தீர்வு பெற்றுத்தர முடியும்." – என்றார்.



### யாழ். மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு

# அதிகாரப் பகிர்வுடன் அபிவிருத்தியும் தேவை

### யாழ்.தொழில் வல்லுநர்கள் சந்திப்பில் ஜனாதிபதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசியல் அதிகாரப் பகிர்வு மாத்திரம் போதுமானது அல்ல எனவும், பிரதேசத்தின் அபிவிருத்தியும் அதில் ஒரு அங்கமாக இருக்க வேண்டும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஏனைய அனைத்து மாகாணங்களிலும் அபிவிருத்தி ஏற்பட்டுள்ள போதிலும் யாழ்ப்பாணத்தில் அபிவிருத்திகள் ஏற்படவில்லை எனவும் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, இந்நிலையை மாற்றி யாழ்ப்பாணத்தையும் நாட்டையும் அபிவிருத்தியின் புதிய கட்டத்துக்குக் கொண்டு செல்வதே தனது எதிர்பார்ப்பாகும் எனவும் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் வலம்புரி ஹோட்டலில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற யாழ். தொழில் வல்லுநர்களுடனான சந்திப்பில் கலந்துகொண்ட போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு கூறினார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்தச் சந்திப்பில் தொழில் வல்லுநர்கள் எழுப்பிய கேள்விகளுக்கும் ஜனாதிபதி சாதகமான பதில்களை வழங்கினார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

“நான் யாழ்ப்பாணத்தின் அரசியல் பிரச்சினைகளைத் தீர்க்கும் நோக்கில் செயற்பட்டு வருகின்றேன். ஆனால், யாழ்ப்பாணத்தின் பிரச்சினைகளை அதிகாரப் பகிர்வில்

தொடர்ச்சி▼













## யாழ். மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு

# அதிகாரப் பகிர்வுடன் அபிவிருத்தியும் தேவை

### யாழ்.தொழில் வல்லுநர்கள் சந்திப்பில் ஜனாதிபதி தெரிவிப்பு

தொடர்ச்சி▲

மாத்திரம் மட்டுப்படுத்த முடியாது. இப்பகுதி அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். ஏனைய அனைத்து மாகாணங்க–ளிலும் அபிவிருத்தி காணப்பட்ட போதிலும் யாழ்ப்பாணத்தில் அபிவிருத்தி இல்லை.

போருக்கு முன்னர், யாழ்ப்பாணம் கொழும்பு, கண்டி மற்றும் காலியுடன் இணைந்து நாட்டின் மூன்றாவது அல்லது நான்காவது பெரிய நகரமாக மாறியிருந்தது. இன்று யாழ்ப்பாணத்தை விட காலி மற்றும் மட்டக்களப்பு நகரங்கள் அபிவிருத்தி அடைந்துள்ளன.

எனவே, நாம் இப்போது யாழ்ப்பாணத்தையும் நாட்டையும் ஒரு புதிய கட்ட வளர்ச்சிக்குக் கொண்டு செல்ல வேண்டும். அதற்காக, எதிர்வரும் செப்டெம்பர் 21ஆம் திகதி காஸ் சிலிண்டருக்கு வாக்களிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்." – என்றார்.







# லொறி – மோட்டார் சைக்கிள் மோதி இளைஞர் ஒருவர் பரிதாப மரணம்!

பொரளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எல்விட்டிகல மாவத்தை, கொஸ்வத்தை வீதிக்கு அருகில் இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவன் உயிரிழந்துள்ளார் என்று பொரளை பொலிஸார் தெரிவித்தனர்.

நாரஹென்பிட்டி நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் லொறி ஒன்றுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

நேற்று இடம்பெற்ற இந்த விபத்தின்போது, மோட்டார் சைக்கிள் செலுத்துநர் லொறிக்கடியில் சிக்கி படுகாயமடைந்த நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

பிலியந்தலை பிரதேசத்தைச் சேர்ந்த 19 வயதுடைய இளைஞரே உயிரிழந்துள்ளார்.



விபத்தையடுத்து லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொரளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்


259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## சமூக வலைத்தளங்களை 2 நாள்கள் முடக்கத் திட்டம்

ஜனாதிபதி தேர்தல் பிரசாரம் முடிவடைந்த பின்னர் 48 மணித்தியாலங்கள் சமூகவலைத்தளங்களைமுடக்கத்தேர்தல்கள் ஆணைக்குழு திட்டமிட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

தேர்தல் பிரசார காலம் முடிவடைந்த பின்னர் சமூக வலைத்தளங்கள் ஊடாகப் பிரசாரம் செய்யப்படுவதையும், சேறு பூசுவதையும் தடுத்து நிறுத்தும் உத்தியாக இந்தத் திட்டம் பரிசீலிக்கப்படுவாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜனாதிபதித் தேர்தல் பிரசாரங்கள் எதிர்வரும் 18 ஆம் திகதி நள்ளிரவுடன் நிறைவடைகின்றன.

அதன் பின்னர் 21 ஆம் திகதி காலை 7 மணி முதல் மாலை 4 மணி வரை வாக்களிப்பு இடம்பெறும்.

18 ஆம் திகதி நள்ளிரவுக்குப் பின்னர் பிரசார நடவடிக்கைகளுக்கு இடமில்லை. நேரடியாவோ, பத்திரிகைகள், தொலைக்காட்சி, இணைய நிறுவனங்கள் உட்பட சமூக ஊடகங்கள் ஊடாகவோ பிரசாரம் செய்ய முடியாது. செய்யக் கூடாது.

ஆயினும் வெளிநாடுகளில் இருந்து இயங்கும் இணைய ஊடகங்கள், முகப்புத்தகக் கணக்குகள், எக்ஸ் தளங்கள் போன்றவை மூலம் இலங்கை ஜனாதிபதித் தேர்தல் பிரசாரங்கள் இச்சமயத்தில் முன்னெடுக்கப்பட்டால் அதைச் சட்ட ரீதியாகக் கையாண்டு தடுக்கும் வலிமை, இயலுமை இலங்கைத் தேர்தல் ஆணயகத்துக்கு இருப்பதாகத் தெரியவில்லை.

அதனால்தான் தேர்தலுக்கு முந்திய இரண்டு நாள்களும் சமூக வலைத்தளங்களைமுடக்கத்தேர்தல்கள்ஆணைக்குழு திட்டமிடுகின்றது எனக் கூறப்பட்டது.

இந்தநிலையில், 19 ஆம் மற்றும் 20 ஆம் திகதிகளில் எவ்வித தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கும் சட்ட ரீதியாக அனுமதியில்லாத போதிலும் சமூக ஊடகங்கம் ஊடாக அதீத பிரசாரங்கள், பொய்ப் பரப்புரைகள், சேறு பூசும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம் என ஊகிக்கப்படுகின்றது.

முன்னைய தேர்தல்களில் இவ்வாறு இடம்பெற்றிருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

இப்பிரச்சினையைச் சட்ட ரீதியாகக் கையாண்டு முழுமையாகத் தடுப்பதற்கான வழி வகைகள் இல்லாத பின்னணியிலேயே அந்தக் கால கட்டத்தில் - 19 மற்றும் 20 ஆம் திகதிகளில் - சமூக வலைத்தளங்களை முடக்கத் தேர்தல்கள் ஆணைக்குழு திட்டமிட்டதாகக் கருதப்படுகின்றது.

தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழு மற்றும் சமூக ஊடக வலையமைப்பை சேர்ந்த நிறுவனங்களுடன் இணைந்து இந்தத் திட்டத்தை முன்னெடுப்பது குறித்து தேர்தல்கள் ஆணைக்குழு கவனம் செலுத்தியுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

18ஆம் திகதி நள்ளிரவு முதல் வாக்களிப்பு வரையான இரண்டரை நாள் கால இடைவழியில் பிரசாரம் செய்வது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ள போதிலும் சமூக வலைத்தளங்கள் ஊடாக முழு மூச்சில் பிரசாரம் மேற்கொள்ள சில தரப்புகள் ஏற்கனவே தயாராகித் திட்டமிட்டுள்ளன எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தப் பின்புலத்திலேயே தேர்தல் பிரசாரம் முடிவடைந்த பின்னர் 48 மணித்தியாலங்கள் சமூக வலைத்தளங்களை முடக்கும் திட்டம் குறித்துத் தீவிரமாகப் பரிசீலிக்கப்படுவதாகக் கூறப்படுகின்றது.

சமூக ஊடகக் குழுக்களுடன் கலந்தாலோசித்த பின்னர் அமைதியான காலத்தில் தேர்தல் பிரசாரம் மற்றும் அவதூறுப் பரப்புரைகளைத் தடுத்துநிறுத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு தீவிர முயற்சிகளை மேற்கொள்ளும் என ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்கதெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சாதி, மதம், இனப் பாகுபாடு இல்லாத கட்சி தே.மு.திக என்கிறார் பிரேமலதா விஜயகாந்த்



"தமிழகத்தில் தே.மு.தி.க. தனக்கென்று ஒரு இடத்தை தக்க வைத்துக் கொண்டு இருப்பதற்கு முக்கியமாக சாதி, மதம், இனம் போன்ற எந்த பாகுபாடும் இல்லாமல் அனைவருக்கும் பொதுவான கட்சியாக தொடர்ந்து பாடுபட்டு வருவதே ஆகும்,"

– இவ்வாறு தே.மு.தி.க. தொண்டர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் கட்சியின் பொதுச் செயலாளர் பிரேமலதா விஜய காந்த் குறிப்பிட்டுள்ளார்.

தே.மு.தி.க. தொடங்கி 19 ஆண்டுகள் நிறைவடைந்து 20 ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் நிலையில், தொண்டர்களுக்கு கட்சியின் பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் கடிதம் எழுதியுள்ளார். அந்தக் கடிதத்தில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"தமிழகத்தில் நிலவும் மணல் கொள்ளை, மீனவர்கள் பிரச்சினை, மதுபான கடைகளால் ஏற்படும் அவலங்கள், சட்டம் ஒழுங்கு பிரச்சினை, பாலியல் வன்கொடுமைகள், சுங்க கட்டண உயர்வு, அண்டை மாநிலங்களுக்கு இடையே உள்ள தண்ணீர் பிரச்சினை, விவசாயம் அழிந்து பாலைவனமாக காட்சியளிக்கும் டெல்டா பகுதிகள், அனைத்து சாலைகளும் குண்டும், குழியுமாக உள்ளதால் மக்கள் பயன்படுத்த முடியாத அவலம், கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாத அரசு போன்ற எத்தனையோ பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வே இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது.

இவற்றுக்கு தீர்வு காணவும், தமிழகத்தில் வறுமை கோட்டுக்கு கீழ் மக்களே இல்லை என்ற நிலையை உருவாக்கவும், தே.மு.தி.க. தொடர்ந்து மக்களுக்காகவும், தமிழகத்தின் வளர்ச்சிக்காகவும் பாடுபடும். எத்தனையோ வெற்றிகள், தோல்விகள், துரோகங்கள், அவதூறு வழக்குகள் வந்த போதும் பல சவால்களை சந்தித்து வீறு நடை போடுகிறது தே.மு.தி.க.

நம் கட்சியினர் உண்மை விசுவாசத்தின் பிரதிபலிப்பாகவும், முன் எப்போதும் இருப்பதை விடவும் பல மடங்கு ஒற்றுமையாகவும், உறுதியோடும் இருந்து வரப்போகும் தேர்தல்களை சந்தித்து தே.மு.தி.க. இன்று தமிழகத்தில் அசைக்க முடியாத சக்தி என்றும், தமிழகத்தில் யாரும் தவிர்க்க முடியாத மாபெரும் இயக்கம் என்றும், நம் உழைப்பால் மேலும் உணர்த்துவோம்.

தே.மு.தி.க. தனக்கென்று ஒரு இடத்தை தக்க வைத்துக் கொண்டு இருக்கிறது என்றால் அதற்கு முக்கியமாக சாதி, மதம், இனம் போன்ற எந்த பாகுபாடும் இல்லாமல் அனைவருக்கும் பொதுவான கட்சியாக தொடர்ந்து பாடுபட்டு வருவதே ஆகும்.

பல்வேறு வெற்றிகள், தோல்விகள், சவால்கள், எதிர் நீச்சல் போட்டு, துரோகங்கள் எல்லாவற்றையும் சந்தித்து நமது பாதையில் எத்தனையோ கற்களும், முற்களும் இருந்தாலும் எல்லாவற்றையும் கடந்து 20 ஆம் ஆண்டில் அடி எடுத்து வைக்கிறது. இந்த நாளில் இயன்றதை செய்வோம் இல்லாதவர்க்கே, தமிழன் என்று சொல்லடா, தலை நிமிர்ந்து நில்லடா என்ற விஜயகாந்தின் தாரக மந்திரம் படி எட்டுத் திக்கும் நமது முரசு வெற்றி முரசாக கொட்ட அனைவரும் ஒன்றாக இணைந்து உழைப்போம்." என்று குறிப்பிட்டுள்ளார்.



# கர்நாடகாவின் மாண்டியாவில் விநாயகர் ஊர்வலத்தில் மோதல்

## 144 தடை உத்தரவு நீட்டிப்பு

கர்நாடகாவில் மண்டியாவில் விநாயகர் ஊர்வலத்தில் இரு பிரிவினரிடையே மோதல் ஏற்பட்டதை தொடர்ந்து பொலிஸ் ஆய்வாளர் உட்பட 3 அதிகாரிகள் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

கர்நாடக மாநிலம் மண்டியாவில் உள்ள நாகமங்களாவில் கடந்த 11 ஆம் திகதி நடந்த விநாயகர் சிலை ஊர்வலத்தில் இரு பிரிவினரிடையே மோதல் ஏற்பட்டது.

இரு தரப்பினரும் கற்களை வீசி தாக்கிக்கொண்டதால் 50 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். 10 இற்கும் மேற்பட்ட கடைகளும், 7 மோட்டார் சைக்கிள்களும் தீ வைத்து கொளுத்தப்பட்டன. அங்கு மர்ம நபர்கள் பெட்ரோல் வெடி குண்டை வீசியதால் பெரும் பதற்றம் ஏற்பட்டது. இதையடுத்து கலவரத்தில் ஈடுபட்ட 55 பேரை பொலிஸார் கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

இந்த நிலையில், மண்டியா மாவட்டபொலிஸ் கண்காணிப்பாளர் திம்மையா விடுத்த அறிக்கையில்,

"நாகமங்களாவில் 500 இற்கும் மேற்பட்ட பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். அங்கு பிறப்பிக்கப்பட்ட 144 தடை உத்தரவு நீட்டிக்கப்பட்டுள்ளது. வன்முறையை தடுக்க தவறிய நாகமங்களா பொலிஸ் ஆய்வாளர் உள்ளிட்ட 3 பேர் பணி இடைநீக்கம் செய்யப்பட்டனர்." என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# தீவிரவாதிகளை கூட ராகுல் சந்தித்து பேசுவார்: பா.ஜ.கவின் எம்.பி. தேஜஸ்வி சூர்யா விமர்சனம்



காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தியின் அமெரிக்கப் பயணம் குறித்து பா.ஜ.கவின் எம்.பி. தேஜஸ்வி சூர்யா விமர்சனம் செய்துள்ளார்.

இதன்போது, ராகுல் ஒருநாள் தீவிரவாதிகளை கூட சந்தித்து பேசலாம் என்று அவர் கூறியுள்ளார்.

தெற்கு பெங்களூரு பா.ஜ.க. எம்.பியான தேஜஸ்வி சூர்யா இதுகுறித்து பெங்களூருவில் செய்தியாளர்களிடம் கூறும்போது,

“இடஒதுக்கீட்டை நீக்குவது தொடர்பாக அமெரிக்காவில் ராகுல் காந்தி தெரிவித்த கருத்துகள் மிகவும் பாதிப்பை ஏற்படுத்துவதாக உள்ளது. அவர் சந்திக்கும் நபர்களும் அதிர்ச்சியை ஏற்படுத்துவதாக உள்ளது. அமெரிக்க எம்.பி. இல்ஹான் ஒமர் போன்ற இந்திய விரோத சக்திகளை ராகுல் காந்தி சந்திக்கிறார். காலிஸ்தான், பாகிஸ்தான், சீனா மற்றும் பங்களாதேஷ் முகவர்களையும் அவர் சந்திக்கிறார். ராகுல் காந்தி ஒருநாள்தீவிரவாதிகளை சந்தித்து பேசினாலும் வியப்பேதும் இல்லை.” – என்றார்.

கர்நாடகாவின் மண்டியா அருகில் விநாயகர் சிலை ஊர்வலத்தில் கற்கள் வீசப்பட்ட சம்பவம் குறித்து தேஜஸ்வி சூர்யா கூறுகையில்,

“இந்த சம்பவம் தற்செயலானது என கர்நாடக உள்துறை அமைச்சர் பரமேஸ்வரா கூறுகிறார். விநாயகர் சிலை ஊர்வலத்தின்போது அவரது வீட்டின் மீது கற்கள் வீசப்பட்டால் அதை தற்செயலானது என்று அவர் கூறுவாரா?” என்று கேள்வி எழுப்பினார்.

# கன்றுக் குட்டிக்குப் பெயர் சூட்டி மகிழ்ந்த இந்தியப் பிரதமர் மோடி







தனது இல்லத்தில் பராமரிக்கப்படும் பசு ஈன்ற கன்றுக் குட்டிக்குப் பிரதமர் நரேந்திர மோடி பெயர் சூட்டிய நெகிழ்ச்சியான காணொலியை அவர் தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ளார்.

அத்துடன் பிரதமர் மோடி குறித்த கன்றினை தனது பூஜை அறைக்கு அழைத்துச் சென்று பூஜை செய்து சால்வை அணிவித்துள்ளார்.

மேலும் கன்றுக் குட்டியின் நெற்றியில் ஒளி போன்ற வெள்ளை நிறத்தில் சுழி உள்ளதால் அதற்குத் தீப் ஜோதி என்று பெயர் சூட்டியுள்ளதாகப் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் காணொளி தற்போது சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகின்றது.





# ஹிஸ்புல்லாவின் ஏவுகணைத் தளத்தை தாக்கி அழித்தது இஸ்ரேலியப் படை

சிரியாவில் அமைந்துள்ள ஹிஸ்புல்லா அமைப்பின் ஏவுகணை உற்பத்தித் தளம் ஒன்றுக்குள் புகுந்த இஸ்ரேலிய விசேட படை அந்த தளத்தை தாக்கி அழித்துள்ள தகவல் வெளியாகியுள்ளது.

இந்தத் தாக்குதல் தொடர்பில் இஸ்ரேலிய தரப்பிலிருந்து எந்த தகவலும் வெளிவராதபோதும் அண்மையில் இடம்பெற்ற இந்த சம்பவம் குறித்த விபரத்தை அமெரிக்க ஊடகம் வெளிப்படுத்தியுள்ளது.

லெபனான் எல்லையில் இருந்து வடக்காக சுமார் 40 கிலோ மீற்றர் தொலைவில் இருக்கும் மஸ்யாப் நகருக்கு அருகில் இஸ்ரேல் நடத்திய இந்த தாக்குதலில் 18 பேர் கொல்லப்பட்டனர் என சிரிய அரச ஊடகம் தெரிவித்தது.

இது தொடர்பில் நியுயோர்க் டைம்ஸ் பத்திரிகை வெளியிட்டிருக்கும் செய்தியில், ஹெலிக்கொப்டர்களில் வந்திறங்கிய இஸ்ரேல் விசேட படையினர் ஈரானால் கட்டப்பட்ட தளத்தை குண்டு வைத்து தகர்த்ததாகவும் அங்கிருந்த முக்கிய தகவல்களை எடுத்துச் சென்றதாகவும் குறிப்பிட்டுள்ளது.



அமெரிக்கா மற்றும் மற்ற அதிகாரிகளின் தகவல்களை அடிப்படையாகக் கொண்டே இந்த செய்தி வெளியாகியுள்ளது.

இஸ்ரேல் படைகளை கட்டுப்படுத்துவதற்கு மேற்படி தளத்திற்கு படையினர் குவிக்கப்படுவதை தடுக்கவே இஸ்ரேல் அங்கு வான் தாக்குதல்களை நடத்தியுள்ளது.

சிரியாவில் இஸ்ரேல் அடிக்கடி வான் தாக்குதல்களை நடத்துகின்றபோதும் அங்கு படையினர் தரையிறங்கி தாக்குதல் நடத்துவது வழக்கத்திற்கு மாறான செயற்பாடு என தெரிவிக்கப்படுகிறது.

# நீண்ட தூர ஏவுகணைகளைப் பயன்படுத்த உக்ரைனை அனுமதிப்பது குறித்து பிரிட்டனிடமிருந்து பதில் இல்லை





வோஷிங்டனில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனுடன் பேச்சுவார்த்தை நடத்திய பின்னர், ரஷ்யாவிற்குள் இலக்குகளைத் தாக்க நீண்ட தூர ஏவுகணைகளைப் பயன்படுத்த உக்ரைனை அனுமதிப்பது குறித்து பிரிட்டன் பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் எந்த முடிவையும் தெரிவிக்கவில்லை.

இது நீண்ட நாள்களாக உக்ரைன் நீண்ட தூர ஏவுகணைகளை பயன்படுத்துவதற்கான கோரிக்கையில் பாரிய பின்னடைவு என தெரிவிக்கப்படுகிறது.

ரஷ்யாவிற்குள் நீண்ட தூர ஏவுகணைகளை உக்ரைன் செலுத்த அனுமதிக்குமாறு பைடனை வற்புறுத்தினீர்களா என்ற கேள்விக்கு கெய்ர் ஸ்டார்மர் பதில் தெரிவிக்கையில், “நீங்கள் எதிர்பார்ப்பது போல் உக்ரைன் உட்பட பல முனைகளில் நீண்ட மற்றும் ஆக்கபூர்வமான கலந்துரையாடலை நடத்தியுள்ளோம்” என்றார்.

முன்னதாக, ரஷ்யா மீது உக்ரைன் நீண்ட தூர ஏவுகணைகளை வீச அனுமதிக்க வேண்டாம் என்று மேற்கத்திய நாடுகளுக்கு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் எச்சரிக்கை விடுத்தார். அத்தகைய நடவடிக்கை உக்ரைன் போரில் நேட்டோவின் நேரடி பங்கேற்பை பிரதிபலிக்கும் என்று புடின் கூறினார்.

வெள்ளை மாளிகையில் பிரிட்டன் பிரதமரை சந்திப்பதற்கு முன்னதாக செய்தியாளர்களிடம் பேசிய பைடன், விளாடிமிர் புடினைப் பற்றி நான் அதிகம் நினைக்கவில்லை என்று கூறினார்.

ரஷ்யாவிற்குள் உள்ள இலக்குகளுக்கு எதிராக நீண்ட தூர ஏவுகணைகளை பயன்படுத்த அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து இன்று வரை உக்ரைனுக்கு அனுமதி வழங்கவில்லை.

எவ்வாறாயினும், உக்ரைனிய ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி, மேற்கத்திய நட்பு நாடுகளுக்கு இதுபோன்ற பயன்பாட்டிற்கு அங்கீகாரம் வழங்குமாறு பலமுறை அழைப்பு விடுத்துள்ளார், இது போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான ஒரே வழி என்று கூறினார்.



# தமிழ்ப் பொது வேட்பாளர்: ரணிலின் வெற்றிக்காகவும் சுமந்திரனை தோற்கடிக்கவும் எடுக்கப்பட்ட ஆயுதமே!



**புருஜோத்தமன் தங்கமயில்**


“...தாயகத்தில் இனியும் சம்பந்தன் காலத்து அரசியலை அனுமதிக்க முடியாது. முள்ளிவாய்க்கால் முடிவுகளின் பின்னர் தாயக அரசியல் - சமூக செயற்பாடுகளில் புலம்பெயர் தரப்புக்கள் ஆளுமை செலுத்த விரும்பின; அதாவது, முடிவுகளை எடுக்கும் தரப்புக்களாக இருக்க நினைத்தன. ஆனால், சம்பந்தனும் சுமந்திரனும் அதற்கு பெரும் தடையாக இருந்தனர். அவர்களின் நிலைப்பாடுகளைத் தாண்டி தாயகத்தில் எதுவும் செய்ய முடியாத நிலை இருந்தது. ஆனால், சம்பந்தனின் மறைவுக்குப் பின்னர், தாயகத்திலுள்ள அரசியல்வாதிகளை இலகுவாக கையாள முடிகின்றது. அவர்கள் ஆளாளுக்கு ஒவ்வொரு பக்கமாக பிரிந்து நிற்கிறார்கள். இப்போது, தாயக அரசியலை சுமந்திரன் ‘ஆதரவு - எதிர்’ அரசியலாக மாற்றுவதன் மூலம், இலகுவாக பிரித்தாளும் நிலை இருக்கின்றது.  அதனால்தான், தமிழ்ப் பொது வேட்பாளர் விவகாரத்தில் பெரும் அணியொன்றை கட்ட முடிந்தது. புலம்பெயர் தேசத்தில் தங்களுக்குள் அடித்துக் கொள்ளும் தரப்பினரும் கூட, பொது வேட்பாளர் விடயத்தில் ஒன்றாகவே நிற்கின்றனர். அதன்மூலம், சுமந்திரனுக்கு எதிரான அரசியலை பலப்படுத்தி, தங்களின் ஆளுமையை தாயகத்தில் செலுத்தலாம் என்று நம்புகின்றன...” என்று கனடாவில் வதியும் (தமிழ்த் தேசியச் செயற்பாடுகளில் தொடர்ச்சியாக ஈடுபடும்) மூத்தவர் ஒருவர் இந்தப் பத்தியாளரிடம் குறிப்பிட்டார்.

ஓர் அரசியல் செயற்பாட்டினை முன்னெடுக்க நினைக்கும் தரப்பினர், தங்களின் தீர்க்கமான இலக்குகள் தொடர்பில் மக்களிடம் தெளிவுபடுத்த வேண்டும். அதுதான், அந்த அரசியல் செயற்பாடு - அதன் செல்நெறி தொடர்பில் மக்களை வழிப்படுத்தும். ஆனால், தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பினரும், அவர்களின் ஜனாதிபதி வேட்பாளரும் அரசியல் செயற்பாடுகள் தொடர்பில் எந்தவித தெளிவூட்டல்களையும் செய்கிறார்கள் இல்லை. மாறாக, தனிநபர் ஒருவருக்கு எதிரான அரசியலை கட்டிக் கூட்டி முன்னெடுக்கும் வேலைகளையே முன்னெடுத்து வருகின்றனர். பிரசாரக் கூட்டங்களிலும் ஊடகங்களிலும் வழங்கப்படும் பேட்டிகளிலும் கூட பொதுக் கட்டமைப்பின் கட்சியினரும், பேச்சாளர்களும், பத்தியாளர்களும் அதனையே பிரதிபலித்து வருகின்றனர். கிட்டத்தட்ட தமிழ்ப் பொது வேட்பாளர் என்பது, தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் சுமந்திரனுக்கு எதிராக திரளும் தரப்பினரின் கருவியாக மாறிவிட்டது. தேர்தல் பிரசார மேடைகளில் தமிழ்ப் பொது வேட்பாளர் ஏன் அவசியம் என்று பேசுவதைக் காட்டிலும், சுமந்திரனுக்கு எதிரான விமர்சனங்களே அதிகம் முன்வைக்கப்படுகின்றன. ஏற்கனவே, பொதுக் கட்டமைப்பின் பேச்சாளர் ஒருவர், தன்னுடைய பத்தியொன்றில் ‘எம்.ஜி.ஆர் - நம்பியார்’ திரை பிம்பத்தினை பிரதிபலிக்கும் ‘நாயக - வில்லன்’ கட்டத்தினை ‘பொது வேட்பாளர் எதிர் சுமந்திரன்’ நிலையோடு நண்பர் ஒருவர் ஒப்பிட்டு கூறியதாக எழுதியிருந்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை முன்னிறுத்த வேண்டும் என்ற விடயத்தை முதலில் அரங்கிற்கு தூக்கி வந்தவர்கள் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியினர். தமிழரசுக் கட்சியினர், ரெலோவையும் புளொட்டையும் வீட்டுச் சின்னத்தில் இனியும் அனுமதிக்க முடியாது என்ற நிலைப்பாட்டை எடுத்த தருணத்தில், புதிய அரசியல் கூட்டொன்றை அவர்கள் கட்டினார்கள். அதில், ஏற்கனவே தமிழரசுக் கட்சியினால் கூட்டமைப்புக்குள் இருந்து வெளித்தள்ளப்பட்ட ஈ.பி.ஆர்.எல்.எவ்வும் இணைந்து கொண்டது. அத்தோடு ஜனநாயகப் போராளிகள், ஏற்கனவே ரெலோவில் இருந்து பிரிந்து சென்ற சிறீகாந்தா - சிவாஜிலிங்கம் அணியும் இணைந்தன. இந்தப் புதிய கூட்டின் மீது முன்னாள் ஆயுதக் குழுவினர் என்ற அடையாளம் இருந்தது. அந்தப் புதிய கூட்டின் தலைமையை எதிர்பார்த்த விக்னேஸ்வரன், அது கிடைக்காது என்ற நிலை வந்த போது, முன்னாள் ஆயுதக் குழுவினரோடு இணைந்து இயங்க முடியாது என்று கூறிவிட்டு விலகினார். முன்னாள் ஆயுதக் குழுவினர் என்ற அடையாளத்தை வைத்துக் கொண்டு தேர்தல் அரசியலில் கோலோச்சுவது அவ்வளவுக்கு சாத்தியமில்லை என்பது, அவர்களுக்கு நன்கு தெரியும். அதன் போக்கில், தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற விடயத்தை அவர்கள் முன்மொழிந்தார்கள். அதன்மூலம் தமிழரசுக் கட்சிக்கு எதிரான அனைத்துத் தரப்புக்களையும்

தொடர்ச்சி▼





# தமிழ்ப் பொது வேட்பாளர்: ரணிலின் வெற்றிக்காகவும் சுமந்திரனை தோற்கடிக்கவும் எடுக்கப்பட்ட ஆயுதமே!

தொடர்ச்சி▲

ஓரணியில் திரட்ட முடியும் என்று நம்பினார்கள். அது, காலப்போக்கில் நடந்தும் விட்டது.

பொதுக் கட்டமைப்பின் திரட்சியை உறுதி செய்ததில் பல காரணிகள் தாக்கம் செலுத்துகின்றன. அதில், முதலாவது ரணிலின் ஜனாதிபதித் தேர்தல் வெற்றிக் கனவு. ராஜபக்ஷக்களுக்கு எதிராக 'அறகலய' வெற்றிபெற்றதும், ரணில் ஜனாதிபதியானார். அவர் ஜனாதிபதியானதும், அடுத்த ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் அக்கறையோடு செயற்படத் தொடங்கினார். அதற்காக அவர் கட்சிகளைப் பிரித்தும் சேர்த்தும், அணிகளை புதிதாகத் கட்டத் தொடங்கினார். அதற்காக கொடுக்கல் - வாங்கல்களை தாராளமாகச் செய்தார். இன்றளவும் அதனைத் தயங்காமல் செய்கிறார். அதில், தமிழ்த் தேசியக் கட்சிகளும், சில நாடாளுமன்ற உறுப்பினர்களும்கூட சேர்ந்து கொண்டுவிட்டார்கள். அதன் ஒருகட்டமாகவே, தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்தை முன்வைக்க வேண்டும் என்று ரணில் தங்களுக்கு அழுத்தம் வழங்கியதாக பொதுக் கட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்களில் மூத்தவர் 'ஒருவர்' தனக்கு நெருக்கமானவர்களிடம் கூறியிருக்கிறார். தற்போது நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கும் முன்னாள் ஆயுத இயக்கங்களின் தலைவர்களில் அவர்தான் மூத்தவர். பொது வேட்பாளர் எண்ணக் கருவின் சூத்திரதாரி ரணில் என்பது அவரின் வாக்குமூலம்.

தமிழரசுக் கட்சிக்குள் எழுந்த தலைமைத்துவப் போட்டியும் அதன் பின்னரான உட்பிளவும், பொதுக் கட்டமைப்பினரை பலப்படுத்துவதில் இரண்டாவதாக தாக்கம் செலுத்தியது. தமிழரசுக் கட்சியின் தலைமைத்துவ தேர்வில் சிறீதரன் வெற்றிபெற்றாலும், அவரினால் செயலாளர் உள்ளிட்ட மத்திய குழுத் தெரிவில் எதிர்பார்த்த வெற்றியை அடைய முடியவில்லை. அதனால், அவர் பொதுக் குழுவின் தீர்மானத்துக்கு எதிராக கொல்லைப்புற தீர்மானங்களின் வழியாக தெரிவுகளை மாற்றியமைக்கும் முயற்சிகளில் ஈடுபட்டார். ஆனால், அதனை நீதிமன்றங்களினூடாக தடுத்து நிறுத்திவிட்டார்கள். அத்தோடு, பொதுக்குழு உறுப்பினர்கள் தேர்வே, கட்சியின் யாப்புக்கு எதிரானது, அதனால் புதிய தேர்வு நடத்தப்பட வேண்டும் என்ற நிலை ஏற்பட்டுவிட்டது. இதனால், தமிழரசுக் கட்சியின் பிளவு அதிகரித்தது. இப்போதுள்ள கட்சியின் மத்திய குழுவை சுமந்திரன் ஆளுமை செலுத்துகின்றார் என்பது வெளிப்படையானது. அப்படியான கட்டத்தில், கட்சியை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கான கருவியாக அல்லது எதிர்காலத்தில் புதிய பயணத்துக்கான ஏற்பாடுகளின் போக்கில் பொது வேட்பாளர் விடயத்தினை சிறீதரன் கையாள்கிறார். அதுதான், தமிழரசுக் கட்சிக்குள் இருந்தே பொது வேட்பாளரை தேர்வு செய்வதற்கும், அதற்கான ஒத்துழைப்பை வழங்க ஒரு தரப்பினரையும் கட்சிக்குள் இருந்தே திரட்டவும் முடிந்திருக்கின்றது. பொதுக்கட்டமைப்பினரையோ, பொது வேட்பாளரையோ தமிழரசுக் கட்சி ஆரம்பத்தில் இருந்து எதிர்த்து வந்தது. அது, சுமந்திரனின் நிலைப்பாடுகளை பிரதிபலிப்பதாகவும் இருந்தது. அப்படியான கட்டத்தில் சுமந்திரனுக்கு எதிரான அணியைப் பலப்படுத்தும் கட்டத்தில் இணைய விரும்பிய தமிழரசுக்குள் இருக்கும் குழுவினர், பொதுக்கட்டமைப்பினை பலப்படுத்தினர்.

மூன்றாவது, ஏற்கனவே தேர்தல்களில் தோற்றவர்களும் அடுத்த தேர்தலில் எப்படி வெற்றி பெறுவது என்ற சிந்தனையோடு இருந்த தரப்பினருக்கும் பொது வேட்பாளர் விடயத்தினை இறுகப் பற்றினர். அதனால், பொதுக் கட்டமைப்பை அவர்களும் வரிந்து கொண்டார்கள். குறிப்பாக, முன்னாள் ஆயுத இயக்கங்களை, அவர்களின் இரத்தக்கறையை தன்னோடு பூசிக்கொள்ள முடியாது என்று கடந்த காலங்களில் வாதிட்ட விக்னேஸ்வரன் போன்றோர், பொதுக் கட்டமைப்புக்குள் அவர்களோடு கூடிக்குலாவும் நிலைக்கு வரவும் அது வித்திட்டது.

நான்காவது, தமிழ்த் தேசிய அரசியலில் ஆளுமை செலுத்த விரும்பிய மூத்த பத்தியாளர்கள் குழாத்தினர். தமிழ்த் தேசிய அரசியல் தங்களைக் கேட்டுத்தான் செயற்பட வேண்டும். அதற்கு இணங்காத தரப்பினர், தமிழ்த் தேசிய அரசியலில் நீடித்திருப்பதற்கு இலாயக்கற்றவர்கள் என்பது, இந்த பத்தியாளர்களில் சிலரின் நிலைப்பாடு. அவர்களின் அரசியல் கொள்கை- கோட்பாடு - செல்நெறியில் பாரிய முரண்பாடுகள் இருக்கின்றன. உதாரணத்துக்கு, சிலர் 13வது திருத்தச் சட்டத்தை தமிழ் மக்களின் அரசியல் தீர்வாக ஏற்க வேண்டும் என்று வாதிடுபவர்கள். இன்னும் சிலரோ, பொது வாக்கெடுப்பினூடாக சுயாதீன தேசம் அமைக்கப்பட வேண்டும் என்று எழுதுபவர்கள். (அதற்கான செல்நெறி - ஒழுங்கு பற்றி அவர்கள் ஒருபோதும் தெளிவுபடுத்தவில்லை). இன்னும் சிலரோ, எந்த அரசியல் நிலைப்பாட்டினை முன்னெடுப்பது என்று தெரியாமல் குழம்பிக் கொள்பவர்கள். ஆனால், இவர்கள் எல்லோரும் சம்பந்தன்-சுமந்திரன் எதிர்ப்புப் புள்ளியில் ஒருங்கிணைவார்கள்.

ஐந்தாவது, தாயக அரசியலில் ஆளுமை செலுத்தி முடிவுகளை எடுக்க நினைக்கும் புலம்பெயர் அமைப்புக்களும், தனி நபர்களும்,

தொடர்ச்சி▼



# தமிழ்ப் பொது வேட்பாளர்: ரணிலின் வெற்றிக்காகவும் சுமந்திரனை தோற்கடிக்கவும் எடுக்கப்பட்ட ஆயுதமே!

தொடர்ச்சி▲

சில வர்த்தகர்களும். இவர்களுக்குள்ளும் பல உள்முரண்பாடுகள் உண்டு. தாயக அரசியலில் ஆளுமை செலுத்துவதை சில தரப்பினர் ஒரு வரட்டு வாதத்துக்காக முன்னெடுக்கிறார்கள். அங்கும், சம்பந்தன் - சுமந்திரன் தங்களின் எதிர்பார்ப்பை ஒருபோதும் கண்டுகொண்டதில்லை என்ற எரிச்சல் பிரதானமானது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக கஜேந்திரகுமார் தலைமையிலான ‘முன்னணி’யை மாற்றுச் சக்தியாக கட்டமைக்க நினைத்தார்கள். அது தோற்றுப்போன தருணத்தில் தமிழ் மக்கள் பேரவை ஊடாக விக்னேஸ்வரனை மாற்றுத் தலைவராக முன்னிறுத்தினார்கள். ஜனவசியத் தலைவர் என்று சித்திரித்துக் கட்டுரைகள் எல்லாம் எழுதப்பட்டன. ஆனால், அதுவும் தோற்றுப்போனது. இப்போது பொதுக்கட்டமைப்பின் பின்னால் திரண்டிருக்கிறார்கள். புலம்பெயர் வர்த்தகர்கள் சிலர் தங்களின் வர்த்தக நடவடிக்கைகளுக்காக தமிழ்த் தேசியக் கட்சிகளை தங்களின் கைப்பாவையாக ஆட்டி வைக்க நினைக்கிறார்கள். அதற்கு இணங்காத சம்பந்தன் - சுமந்திரனை கடந்த பொதுத் தேர்தலிலேயே எப்படியாவது அகற்றிவிட வேண்டும் என்று துடியாய் துடித்தார்கள். கோடிகளில் பணத்தினை இறக்கி வேலையும் செய்தார்கள். ஆனால், அது சாத்தியமாகவில்லை. அப்படியான நிலையில், வேண்டா வெறுப்பாக வேனும் பொதுக் கட்டமைப்பின் பின்னால் அவர்களும் இப்போது நிற்கிறார்கள்.

மேற்கண்ட ஐந்து காரணிகளில் வெளிப்படுவது ரணிலை வெற்றி பெற வைக்கும் உத்திகளும், சுமந்திரனின் கட்டுப்பாட்டில் இருப்பதாக ‘அவர்கள்’ நம்பும் தமிழ்த் தேசிய அரசியலை தங்களின் கட்டுக்குள் கொண்டுவருவதுமாகும்.

தமிழ்த் தேசிய அரசியலை தங்களின் சுய இலாப நோக்கங்கள், பதவிப் போட்டிகள், வர்த்தக நலன்கள், தன்முனைப்பு (ஈகோ) மனநிலை உள்ளிட்ட காரணிகளுக்காக கையாள முயல்வது என்பது அறமற்ற அரசியல். தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்துக்கு முன்னால் இப்போது திரண்டிருப்பவர்களும், அவர்களின் நடவடிக்கைகளும் நாளுக்கு நாள் அதனையே பிரதிபலிக்கின்றன. இவ்வாறான நிலை, மக்கள் மீட்சியை ஒருபோதும் சாத்தியப்படுத்தாது. தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பினர், தங்களின் அரசியல் இலக்கு என்ன என்பது தொடர்பில் எந்தவித தெளிவுபடுத்தல்களையும் இதுவரை செய்தது இல்லை. அவர்கள் ஆரம்பத்தில், ஜனாதிபதித் தேர்தலை பொது வாக்கெடுப்பாக தமிழ்த் தேசிய அரசியல் களம் கையாள முடியும் என்ற வாதத்தை முன்வைத்தார்கள். ஆனால், அது அபத்தமானது என்ற விடயம் சுட்டிக்காட்டப்பட்டதும், அதனை கைவிட்டார்கள். சர்வதேசத்துக்கு செய்தி சொல்வோம் என்றும் கூறினார்கள். ஆனால், தமிழ் மக்களின் செய்தி என்ன என்பது, கடந்த 75 ஆண்டுகளுக்கும் மேலாக ஒரே குரலில் சொல்லப்பட்டுவிட்டது என்பதும், புதிதாக என்ன செய்தியை சொல்வது என்று கேள்வி எழுப்பியதும், அதனையும் கைவிட்டார்கள். இப்போது, இறுதியாக அவர்கள் எடுத்துக் கொண்டிருப்பது தமிழ்த் தேசிய வாக்குளை ஓரணியில் திரட்டுவது என்ற வாதம்.

தமிழ்த் தேசிய அரசியலில் நம்பிக்கையிழந்துள்ள மக்களை, மீண்டும் நம்பிக்கை அரசியலின் பக்கத்திற்கு நகர்த்துவது என்பது எப்போதும் முக்கியமானது. ஆனால், அந்த நம்பிக்கை அரசியலை எதன் மேல் கட்டமைக்கிறோம் என்ற தெளிவு இருக்க வேண்டும். மேம்போக்கான எந்த அரசியல் அணுகுமுறையும் எதனையும் பெற்றுத் தராது. தமிழ்த் தேசிய வாக்குகளை ஓரணியில் திரட்டுவதற்காக தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்தியதாக சொல்லிக் கொள்ளும் பொதுக் கட்டமைப்பினர், தமிழரசுக் கட்சி என்ற பிரதான கட்சிக்குள் இருந்து நபர்களை உடைத்து எடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கின்றது. அது என்ன வகையிலான ஒற்றுமையை ஏற்படுத்தும் என்று தெரியவில்லை.

பொது வேட்பாளரை முன்னிறுத்துதல் என்பது அடிப்படையில் ரணிலின் வடக்கு கிழக்கு முகவர்களின் தேர்வாகவும், சுமந்திரனுக்கு எதிரான அரசியலை ஓரணியில் கட்டமைக்கும் நோக்கத்தையுமே இறுதிப்படுத்தியிருக்கின்றது. ஏனெனில், அந்த அணியினரின் நடவடிக்கைகளே அதனை அப்பட்டமாக பிரதிபலிக்கின்றன. கொள்கையும் இலக்குமற்ற ஒருங்கிணைவு என்பது, எந்தவித நல்ல மாற்றங்களையும் ஏற்படுத்தாது. கடந்த காலத்தில் தமிழ் மக்கள் பேரவை, எந்தவித இலக்குமற்று திரட்டப்பட்டு கைவிடப்பட்டு காணாமற்போனது. அது மாதிரியே, ஜனாதிபதித் தேர்தலின் பின்னர், பொதுக் கட்டமைப்பினரும் காணாமற்போவார்கள். அப்படியான ஒரு தரப்பினரை நம்பி தமிழ் மக்கள் வாக்களிப்பது என்பது அரசியல் தற்கொலைக்கு ஒப்பானது. தமிழ்ப் பொது வேட்பாளர் என்பது ஒரு அபத்தக்கனவு, அதனை நோக்கி திரள்வது தேசமாக திரள்வதாக ஒருபோதும் கொள்ள முடியாது. ஏனெனில், அப்படியான காட்சிகளை பொதுக் கட்டமைப்பினரோ, அதற்குள் இருக்கும் கட்சியினரோ ஒருபோதும் பிரதிபலிக்கவில்லை.



# வெல்லப் போகின்றவர் யார்? குழப்பத்தில் வாக்காளர்கள்!



வி.எஸ்.சிவகரன்

கடந்த காலங்களில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல்களில் யார் வெற்றி பெறப்போகிறார்கள் என்பது தொடர்பில் நேரத்துடன் ஓரளவுக்குத் தெளிவு ஏற்பட்டு விடும். ஆனால் வரும் ஜனாதிபதி தேர்தலில் மூவரில் யார் வெல்லப் போகிறார்கள் என்கின்ற வாதம் எல்லோர் மத்தியிலும் உண்டு. சிங்கள வாக்குகள் மூன்றாகப் பிரியக்கூடிய வாய்ப்புண்டு. மூவருக்குள்ளும் கடுமையான மும்முனைப் போட்டி நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. வடக்கு - கிழக்கு, மலையகம் மற்றும் ஏனைய பகுதிகளில் உள்ள தமிழ், முஸ்லிம் வாக்குகள்தான் வரும் ஜனாதிபதித் தேர்தலின் வெற்றியைத் தீர்மானிக்கக்கூடிய ஏது நிலை காணப்படுகிறது.

அதில் ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸ இருவருக்குமே தமிழ் முஸ்லிம் வாக்குகள் அதிகமாகக் கிடைக்கக்கூடிய வாய்ப்புண்டு. அதனால் போட்டிக்களத்தில் இந்த இருவருக்கும் இடையேதான் வெற்றி - தோல்வி வாய்ப்பு இருக்கலாம் என நோக்கப்படுகிறது. அனுரகுமார திஸநாயக்க ஒவ்வொரு தேர்தலிலும் மக்கள் மத்தியிலே பொதுநிலை அபிப்பிராயத்தை ஏற்படுத்துவதற்காக இவ்விதமான கூட்டத்தைக் கூட்டி காட்டுவது என்பது வழமைதான். கடந்த ஜனாதிபதி தேர்தலிலும் காலி முகத்திடலை மக்களால் நிறைத்துக் காட்டினார்கள். ஆனால் வாக்கோ ஐந்து லட்சத்தை எட்டவில்லை. தற்போது அந்த வாக்கில் இரண்டு அல்லது மூன்று மடங்கு அதிகரிக்கலாம். ஆனால் வெற்றியை நோக்கி நகரக்கூடிய நிலை ஏற்படுமா என்பது கேள்வியே. நாடு முழுவதும் வாக்காளர்கள் மத்தியில் ஒரு பெரு எழுச்சி ஏற்படவில்லை. மேலைத்தேய நாடுகளில் உள்ளது போல் தேர்தலில் ஆரவாரத்தைக் காண முடியவில்லை. நாடு அமைதியாகவே இருக்கிறது. இந்த நிலை ஒன்றில் ஆட்சியாளர்களுக்கு எதிரான மனோநிலையாக இருக்கலாம். அல்லது எவரையும் நம்ப முடியாது என்கின்ற ஒரு அலட்சிய போக்காகக் கூட இருக்கலாம். மக்கள் ஜனநாயகத்தின் மீது நம் பிக்கை இழந்த ஒரு நிலையாகவும் இருக்கலாம். அல்லது தற்போது இருக்கின்ற தலைவர்கள் எவரும் இந்த நாட்டை ஆள்வதற்குப் பொருத் தமானவர்கள் அல்லர் என்கின்ற நிலைப்பாடும் ஏற்படலாம். எவர் வந்தாலும் பரவாயில்லை, நமக்கு என்ன என்கின்ற மனோ நிலையில்தான் பலர் இருக்கின் றனர் எனத் தெரிகிறது. தமிழ் மக்களை பொறுத் தவரையில் எந்தச் சிங்கள ஜனாதிபதி வேட்பாளரும் தமிழ் மக்களுக்கு அதிகார பகிர்வு வழங்கப் போவது இல்லை, குறைந்தபட்சம் அத்தியாவசியப் பிரச்சனைகளுக்கு கூட தீர்வு வழங்கக் கூடியவர்களாக இருப்பதற் குரிய வாய்ப்பு மிகவும் குறைவு, பிரதான வேட்பாளர் கள் அதிகாரப்பகிர்வு தொடர்பில் தெளிவான எந்த விடயத் தையும் முன்வைக்கவில்லை என்று அரசியல் தெளிவுள்ள தமிழ் வாக்காளர் மத்தியில் பிரதான வேட்பாளர்களுக்கு எதிரான மனோநிலை ஏற்பட்டிருக்கலாம்.

தீர்க்கமான - வலிமையான - உடன்பாடின்றி சுமந்திரனின் சஜித் பிரேமதாஸ்வுக்கான ஆதரவு என்பதை தமிழ் மக்கள் அதிகம் ரசிக்கவில்லை. சஜித் பிரேமதாஸவே அதனை எதிர்பார்க்கவில்லை. இதன் எதிரொலியே பொது வேட்பாளர் அரிய நேத்திரனுக்கு ஓரளவு ஆதரவையும் அவர் மேலான கரிசனையும் அனுதாபத்தையும் ஏற்படுத்தியுள்ளது. ஆகவே சுமந்திரன் பொது வேட்பாளரை எதிர்த்தாலும் அவர்களுக்கு வாக்கு அதிகரிப்பதற்குரிய இலவச பரப்புரையும் செய்துள்ளார். பொதுக் கட்டமைப்பு சுமந்திரனுக்கு நன்றி கூற வேண்டும். தமிழரசுக் கட்சியின் சஜித் பிரேமதாஸ ஆதரவு என்பது வெறுமனே சுமந்திரன் அணியின் அறிவிப்பாகவே தமிழரசுக்கட்சியாலும் சிறிதரன் அணியாலும் மக்கள் மத்தியிலும் உணரப்படுவதனால் அதற்கான

தொடர்ச்சி▼







# வெல்லப் போகின்றவர் யார்? குழப்பத்தில் வாக்காளர்கள்!

தொடர்ச்சி▲

வரவேற்போ ஆதரவோ பெரிய அளவில் எங்கும் இருப்பதாகத் தெரியவில்லை. இந்த அறிவித்தல் தமிழ் வாக்காளர் மத்தியில் எவ்விதமான தாக்கத்தையும் ஏற்படுத்தியதாகவும் இல்லை. தமிழரசுக்கட்சி திரிசங்கு நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. அது தமிழ் மக்களையும் பலவீனப்படுத்தும். அதனால் ஆயுதக் குழுக்கள் தங்களுக்குள் அகமகிழ்ந்து கொள்ளலாம்.

'தேசமாகத் திரள்வோம்!' எனப் பொது வேட்பாளரை நிறுத்தியவர்களால் தமிழ் மக்கள் மத்தியில் ஐக்கியத்தை ஏற்படுத்த முடியவில்லை. கட்சிகளுக்குள்ளும் உள்ளூரிலும் குழப்பங்களையும் விமர்சனங்களையும் இச்சூழல் ஏற்படுத்தி உள்ளது. எதிர்காலத்தில் பொதுக் கட்டமைப்பு ஓர் அரசியல் கட்சியாக மாறக்கூடிய வாய்ப்பு உள்ளது. நாடாளுமன்றத் தேர்தல் பொதுக் கட்டமைப்புக்கும் தமிழரசுக்கட்சிக்கும் நேரெதிர் மோதலாகக் கூட இருக்கலாம். பல அணிகளாக பிளவுபட்டுள்ள தமிழரசுக் கட்சி நாடாளுமன்றத் தேர்தலை எப்படி எதிர்கொள்ளப் போகின்றதோ தெரியவில்லை. முழுமையாக அதன் கட்டுக்கோப்பு சிதைவடைந்துள்ளத. மீளக் கட்டி எழுப்புவது என்பது ஒன்றும் சர்வ சாதாரண விடயம் அல்ல.

இவ்விதமான நெருக்கடிக்குள் மீண்டும் தமிழரசுக் கட்சியின் அறுவர்கொண்ட குழு வரும் 16ஆம் திகதி கூடி எவருக்கு ஆதரவு என்கின்ற நிலைப்பாட்டை வெளிப்படுத்த இருப்பதாக அறிகிறோம். அண்மைக் காலமாக தமிழரசுக் கட்சியின் செயற்பாடு முன்பள்ளி சிறார்களை விஞ்சி விட்டது. அரசியல் முடிவுகளை திடமாகவும் தீர்க்கமாகவும் முன் அனுபவத்துடனும் எதிர்காலத்தில் நிலைபெறக் கூடிய வலிமையுடனும் மேற்கொள்ள வேண்டும். அத்தகைய தீர்மானங்களை பொறுப்பின்றி மேற்கொள்வதும் பின்னர் அதனை வைத்து முரண்படுவதும் ஆங்காங்கே கட்சி அங்கத்தவர்கள் விமர்சிப்பதும் தீர்மானத்திற்கு எதிராக செயலாற்றுவதும் தலைவர் ஒரு கோணத்திலும் மற்றவர்கள் இன்னொரு விதமான விமர்சனத்துக்குள்ளும் என முழுமையான முரண்பட்ட தரப்புகளாகவே மாறி விட்டார்கள். ஆகவே இவர்களால் எடுக்கப்படுகின்ற தீர்மானத்திற்கு மக்கள் மத்தியில் பேராதரவு கிடைக்கும் என இவர்கள் எந்த நம்பிக்கையில் இருக்கிறார்கள் என்று புரியவில்லை. இந்தத் தேர்தல் முடிவுகள் அடுத்து வருகின்ற நாடாளுமன்ற தேர்தலுக்கு கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தும். எந்தப் புள்ளியில், எவர் நிற்கிறார் என்பது முக்கியமல்ல. எவருடைய கணக்கு வெற்றி பெறுகிறதோ அந்தக் கணக்கில் இருந்து தான் அரசியல் தொடங்கப் போகிறது. பலருடைய கனவுகள் கானல் நீராகப் போகின்றன. சிலருடைய ஆசைகள் நீராசையாக போகப்போகின்றன. எதிர்பார்க்காதவர்கள் சிலர் இருப்பை தக்க வைத்துக் கொள்ள போகிறார்கள். ஆகவே வரும் 22 ஆம் திகதி பலருக்கும் பல செய்திகளை கூற இருக்கிறது. வாக்காளர்கள் மத்தியிலே ஏற்பட்டுள்ள வெறுப்பு - விருப்பின்மை தேர்தலில் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தப் போகிறது என்று தெரியவில்லை. இவர் வரவேண்டும் என்பது அல்ல முக்கியம், இவர் வரக்கூடாது என்பதே அரசியலின் அடிப்படை. இந்தத் தேர்தல் தமிழ்த் தேசியக் கட்சிகளை மிகவும் பலவீனப்படுத்தி அவர்களின் முக்கியத்துவத்தை கேள்விக்குட்படுத்தி விட்டது.

உரிய அங்கீகாரமோ அதற்குரிய மரியாதையோ பிரதான கட்சிகளால் வழங்கப்படவில்லை. இந்த நிலைமை நீடித்தால் வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியம் பேசுகின்ற கட்சிகள் மிக மோசமான பின்னடைவை சந்திக்க நேரிடும். பண நாயகத்துக்கு முன்னால் தமிழ்த் தேசிய இருப்பு என்பது தலைவர்களின் இரண்டகமான செயல்பாட்டுக்கு பின்னரும் சாதாரண வாக்காளர்கள் இவர்களை நம்பி வாக்களிப்பார்களா என்கின்ற கேள்வி இங்கு பிரதானமாக எழுகின்றது. ஏனெனில் ஜனாதிபதி தேர்தலில் பல தமிழ்த்தேசியம் பேசிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கும் இங்குமாக இருக்கிறார்கள். இன்னும் சிலர் வெளிப்படையாக எந்த கருத்துக்களையும் கூறாமல் அமைதி காக்கின்றவர்களும் உண்டு. சிங்களக் கொள்கை வகுப்பாளர்கள் தாங்கள் நினைத்தமை போல தமிழ் கட்சிகளின் முக்கியத்துவத்தை குறைத்து விட்டனர் எனத் தங்களுக்குள் எக்காளமிட்டு கொள்ளலாம். அதை எந்தத் தமிழ்க் கட்சியும் புரிந்து கொண்டதாக இல்லை. நீயா, நானா எனப் பதவி ஆசையால் பரிதவித்துக் கொண்டிருக்கிறார்கள். எவரிடமும் தலைமைத்துவமோ, நிதானமோ தமிழ் மக்கள் நம்பக்கூடிய ஆளுமைத்தோற்ற வெளிப்பாடோ, வாக்குக் கவர்ச்சியோ, நம்பகத்தன்மையோ காணப்படவில்லை. எல்லோரும் தந்திரசாலிகளாகவே மாறிவிட்டார்கள்.

இத்தேர்தல் சிங்கள கட்சிகளுக்கு மட்டுமன்றி தமிழ்க்கட்சிகளுக்கும் பல்வேறு விதமான சங்கதிகளை புரிய வைக்கும். ஒருமித்த நிலைப்பாடுள்ள கட்சிகள் ஒரு கூட்டாக அணிதிரளாவிட்டால் தமிழ்த்தேசியம் என்பது காணாமல் போய்விடும் என்கின்ற செய்தியை தேர்தல் முடிவுகள் இவர்களுக்கு கட்டியம் கூறும். அதற்குப் பின்னரும் கூடப் பதவி ஆசைக்குள் மூழ்கி இருக்கப் போகிறார்களா என்பதுதான் சாமானிய தமிழ் வாக்காளனின் கேள்வியாக இருக்கிறது. குழப்பத்தில் இருக்கின்ற வாக்காளர் எவ்வாறான தீர்மானத்தை எடுக்கப் போகிறார்கள் என்று எந்தத் தேர்தல் கருத்துக் கணிப்பாளர்களாலும் கணிக்க முடியாததாகவே உள்ளது. ஆகவே 22 ஆம் திகதியே இதற்கான பதில்கள் யாவும் வெளிப்படும். அதுவரை இவ்விதமான குழப்பங்கள் நீளும். சூழ்ச்சியை சூதுமதியால் வெல்வதே மூன்றாம் மண்டல நாடுகளின் முதுகெலும்பற்ற ஜனநாயகம். இலங்கையும் அதற்கு விதிவிலக்கல்ல.

# சஜித்தின் சுவரொட்டிகளை ஒட்டிய இருவர் மட்டு. மாமாங்கத்தில் கைது

(கனகராசா சரவணன்)

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தேசிய மக்கள் சக்தி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் சுவரொட்டிகளை மட்டக்களப்பு நகரப் பகுதியில் இரவில் ஓட்டிக் கொண்டிருந்த சம்பவத்தில் கைது செய்யப்பட்ட இரு ஆதரவாளர்களையும் நேற்று சனிக்கிழமை மட்டக்களப்பு நீதிவான் பிணையில் விடுவித்துள்ளார்.

மட்டு. தலைமையகப் பொலிஸார் பிரதேசத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நள்ளிரவு வீதி ரோந்து நவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது மாமாங்கம் பகுதியில் வீதியிலுள்ள மின்சார தூண்கள் மற்றும் சுவர்களில் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரோமதாஸவை ஆதரித்து தேர்தல் சட்டத்தை மீறி சுவரொட்டிகளை ஓட்டிக் கொண்டிருந்த இருவரை கைது செய்தனர். சுவரொட்டிகளையும் மீட்டனர்.

கைது செய்யப்பட்ட இருவருக்கும் எதிராக வழக்கு தாக்கல் செய்து நேற்று மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தயபோது இருவரையும் நீதிவான் சரீரப்பிணையில் செல்ல அனுமதித்தார்

# 2025இன் பாடசாலை தவணை ஜனவரி 20 இல் ஆரம்பமாகும்!

2025 ஆம் ஆண்டுக்கான பாட சாலை தவணை கல்வி நடவடிக்கைகள் ஜனவரி 20 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜ யந்த தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை கூறினார்.

அடுத்த ஆண்டில் ஜனவரி 02 ஆம் திகதி பாடசாலை கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு 2 வாரங்களுக்கு



மூன்றாம் தவணை கல்வி செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுமென அவர் குறிப்பிட்டார்.

2025 ஜனவரி 20 ஆம் திகதி அடுத்த ஆண்டுக்கான முதலாம் தவணை கற்றல் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட வுள்ளமையுடன் பாடப்புத்தகங்கள் மற் றும் சீருடைகள் வழங்கப்பட்டு நிறைவு செய்யப்படுமென கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகள் எதிர்வரும் 2 வாரங்களுக்குள் வெளியிடப்படும் என அவர் கூறினார்.

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையை நடத்த இடர் முகாமைத்துவ நிலையம் ஒத்துழைப்பு

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையை அனர்த்தங்களினால் பாதிக்கப்படாத வகையில் நடத்துவதற்கு விசேட வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

பரீட்சை திணைக்களத்துடன் இணைந்து இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

ஏதேனுமொரு அனர்த்தம் காரணமாக எந்தவொரு பிள்ளையும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தடையாக இருப்பின் இடர் முகாமைத்துவ நிலையத்தின் அவசர இலக்கமான 117 க்கு அறிவிக்க முடியும்.

இதனை தவிர, 0113 66 80 20, 0113 66 8100, 0113 66 80 13, 0113 66 80 10 மற்றும் 076 3 117 117 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கும் அறிவிக்க முடியும்.

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
பரீட்சைத் திணைக்களம் - இலங்கை
Department of Examinations - Sri Lanka

இந்த விசேட தொலைபேசி இலக்கங்கள் நேற்றும், இன்றும் மாத்திரம் இயங்கும் என இடர்முகாமைத்து நிலையம் தெரிவித்துள்ளது.

# வாக்காளர் அட்டைகள் 84 வீதம் விநியோகம்!

ஜனாதிபதித் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளில் 84 வீதமானவை விநியோகிக்கப்பட்டுள்ளன எனத் தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஒரு கோடியே 45 லட்சம் உத்தியோகப்பூர்வ வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன என சிரேஷ்ட பிரதி தபால் மா அதிபர் ராஜித ரணசிங்க தெரிவித்துள்ளார்.

உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை விநியோக நடவடிக்கைகள் இன்றுடன் நிறைவடையும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் இதுவரை கிடைக்காதவர்கள் எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை அருகிலுள்ள தபால் நிலையங்களில் அதனை பெற்றுக்கொள்ள முடியும் என சிரேஷ்ட பிரதி தபால் மாஅதிபர் ராஜித ரணசிங்க கூறினார்.






# தேர்தலை சுதந்திரமாகவும் நீதியாகவும் நம்பகத்தன்மையுடனும் நடத்தத் தயார்

## தேர்தல் ஆணைக்குழு தெரிவிப்பு

ஜனாதிபதித் தேர்தலை சுதந்திரமாகவும் நீதியாகவும் நம்பகத்தன்மையுடனும் நடத்துவதற்குரிய அனைத்து ஏற்பாடுகளையும் மேற்கொண்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவிக்கின்றது.

இந்த விடயத்தில் சட்ட ரீதியாக மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்த சுற்றறிக்கைகள், அறிவுறுத்தல்கள், பணிப்புரைகளை வெளியிட்டுள்ளமையோடு அது குறித்து பொதுமக்களையும் வெகுசன ஊடகங்கள் ஊடாக அறிவுறுத்தியுள்ளதாக ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

எனினும், தேர்தல் ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களுக்கு புறம்பாக பல்வேறு தரப்பினரும் அமைப்புகளும் தேர்தல் செயன்முறை தொடர்பில் குறிப்பாக வாக்கு அடையாளமிடப்படும் விதம், வாக்குகளையும் விருப்புகளையும் எண்ணும் விதம், தேர்தல் சட்டங்களை வலுவாக்கம் செய்தல் மற்றும் பிரசார நடவடிக்கைகள் சார்ந்த பணிகள் குறித்து தெரிவிக்கும் கூற்றுகளும் அபிப்பிராயங்களும் ஊடகங்கள் வாயிலாக பிரசாரம் செய்யப்படுவதை அவதானிக்க முடிவதாக ஆணைக்குழு கூறியுள்ளது.

இவ்வாறான விடயங்கள் தேர்தல் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ அறிவித்தல் அல்லவெனவும், அவ்வாறான கூற்றுகள் எவையும் செல்லுபடி அற்றவை எனவும், அவை தொடர்பான பொறுப்பு தமது ஆணைக்குழுவுக்கு இல்லை எனவும் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதனால், தேர்தல் ஆணைக்குழு இந்தத் தேர்தல் தொடர்பிலான அனைத்து விடயங்கள் மற்றும் பணிகள் தொடர்பாக உத்தியோகபூர்வமாக அறிவிப்பதால் வேறு நபர்களும் அமைப்புகளும் வெளியிடும் கருத்துக்களையும் அறிவுறுத்தல்களையும் பொருட்படுத்த வேண்டாமென தேர்தல் ஆணைக்குழு மக்களை கேட்டுக்கொண்டுள்ளது.




# பிரசார நடவடிக்கைகளில் சிறுவர்களை ஈடுபடுத்துவது தொடர்பாக விசாரணை

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான அரசியல் பிரசாரங்களில் பல்வேறு அரசியல் கட்சிகளும் சிறுவர்களை ஈடுபடுத்துவது குறித்து முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

அது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் அது தொடர்பாக ஏற்கனவே விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

18 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் பெரியவர்களின் உதவி, தலையீடு அல்லது வற்புறுத்தலுடன் இந்தத் தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடுகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளதாக சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை சுட்டிக்காட்டியுள்ளது.

தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் சிறுவர்கள் பங்கேற்பதால் விபத்துக்கள் அல்லது உடல் மற்றும் மன உளைச்சல்களுக்கு உள்ளாக நேரிடும் என அதிகார சபை எச்சரித்துள்ளது.

அவ்வாறான சந்தர்ப்பங்களில் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு தமது அதிகார சபைக்குள்ளதெனவும் இதனால் அந்த பொறுப்புகளை தாமதமின்றி நிறைவேற்ற நடவடிக்கை எடுப்பதாகவும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை கூறியுள்ளது.

இலங்கை அரசாங்கம், ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் உரிமைகள் சாசனத்தில் கையொப்பமிட்டு அதில் அங்கம் வகிப்பதுடன் பெற்றோர் மற்றும் பாதுகாவலர்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் சிறார்களின் பாதுகாப்பை உறுதி செய்ய கடமைப்பட்டுள்ளனர் என அந்த சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை அறிவுறுத்தியுள்ளது.

எனவே, சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் நலன்களை அனைவரின் பொறுப்பாகக் கருதி தேர்தல் பிரசாரங்களில் சிறுவர்கள் பங்கேற்பதைத் தடுக்குமாறு பெற்றோர், பாதுகாவலர்கள் மற்றும் அனைத்து அரசியல் கட்சிகளையும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை வலியுறுத்தியுள்ளது.



# காசநோய் தடுப்பு சிகிச்சை; அமைச்சரவை அங்கீகாரம்

இலங்கையில் காசநோய்த் தொற்று தற்போது அதிகரித்துள்ளதுடன், இந்தத் தொற்றுநோய் மரணங்களுக்குப் பிரதான காரணமாகவும் உள்ளது.

2021 ஆம் ஆண்டில் காசநோய் தடுப்பு சிகிச்சை தொடர்பாக உலக சுகாதார நிறுவனத்தின் வழிகாட்டல்களுக்கு ஏற்ற வகையில் இலங்கைக்கும் வழிகாட்டல் தயாரிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, காசநோய் தடுப்பு மற்றும் மார்பு நோய் தொடர்பான தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அமுல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள பராமரிப்பு மாதிரியின் வினைத்திறனை அவதானிப்பதற்காகக் காலி மாவட்டத்தில் ஆய்வு மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது.

அதற்காக 387,280 அமெரிக்க டொலர் நிதியை வழங்குவதற்கு காசநோய் மற்றும் நுரையீரல் நோய் தொடர்பாகச் செயற்படும் சர்வதேச சங்கம் சம்மதம் தெரிவித்துள்ளது.

ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தின் மருத்துவப் பீடத்துடன், சுகாதார அமைச்சின் காசநோய் தடுப்பு மற்றும் மார்பு நோய் தொடர்பான தேசிய நிகழ்ச்சித்திட்டமும் இணைந்து இந்த ஆய்வுகளை மேற்கொள்ளவுள்ளன.

அதற்கமைய, இந்த ஆய்வை மேற்கொள்வதற்காக காசநோய் மற்றும் நுரையீரல் நோய் தொடர்பாகச் செயற்படும் சர்வதேச சங்கம், சுகாதார அமைச்சு மற்றும் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம் ஆகியவற்றுக்கிடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கையில் கையெழுத்திடுவதற்காகக் கல்வி அமைச்சர் மற்றும் சுகாதார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.




# சாதாரண தர பரீட்சை பெறுபேறுகள் இரு வாரங்களுக்குள் வெளியிடப்படும்

க.பொ.த. சாதாரண தர பரீட்சையின் பெறுபேறுகள் அடுத்த இரண்டு வாரங்களுக்குள் வெளியிடப்படும் எனக் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த அறிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் இதனைத் தெரிவித் துள்ளார். அத்துடன், 2025 ஆம் ஆண் டுக்கான முதலாம் தவணை பாடசாலை செயற்பாடுகள் எதிர்வரும் ஜனவரி 20 ஆம் திகதி ஆரம்பிக்கப் படும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, 2024 ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தரப் பரீட்சை எதிர்வரும் நவம்பர் 25 ஆம் திகதி முதல் டிசம்பர் 20 ஆம் திகதி வரை நடைபெறும் எனப் பரீட்சைகள் திணைக்களம் நேற்று முன்தினம் அறிவித்திருந்தது.



# அறநெறிப் பாடசாலைகளின் ஆசிரியர்களுக்குச் சீருடை!

பௌத்த, இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள் மேற்கொள்ளும் சேவையைப் பாராட்டி, அவர்களை ஊக்குவிப்பதற்காகத் தற்போது 5,000 ரூபா ஆசிரியர் கொடுப்பனவு வழங்கப்படுகிறது.

இந்தக் கொடுப்பனவுக்கு மேலதிகமாக 2022 ஆம் ஆண்டுவரை அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்குச் சீருடை வழங்கப்பட்டுள்ளதுடன், தற்போது சீருடை வழங்கும் திட்டம் அமுல்படுத்தப்படவில்லை.

அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்குச் சீருடை வழங்குதல் தொடர்பாகப் பௌத்த சாசன, மத மற்றும் கலாச்சார அமைச்சர் சமர்ப்பித்த முன்மொழிவைக் கருத்தில் கொண்டு, 2025 ஆம் ஆண்டில் அனைத்து மதங்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கு 5,000 ரூபா ஊக்குவிப்புக் கொடுப்பனவு மற்றும் 2,500 ரூபா சீருடைக் கொடுப்பனவு என்ற வகையில் 7,500 ரூபா கொடுப்பனவை வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# அடுத்த மூன்று வருடங்களுக்கான வர்த்தக திட்டம் தயாரிக்கப்பட்டது

இலங்கைக்குரிய வர்த்தக வசதிக்கான வழிகாட்டல்களும் செயல் திட்டமும் தயாரிக்கப்பட்டுள்ளன.

2016 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற அமைச்சரவை அனுமதியுடன் நிறுவப்பட்ட தேசிய வர்த்தக வசதிக்கான குழுவினால் இந்த வழிகாட்டல்களும் செயல்திட்டமும் தயாரிக்கப்பட்டுள்ளன.

2025 ஆம் ஆண்டு முதல் 2028 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியை இலக்காகக் கொண்டே இந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

உலக வர்த்தக அமைப்பின் வர்த்தக வசதிக்கான ஒப்பந்தத்தைச் செயல்படுத்துவதும் அதில் உள்ள 36 விடயங்களை அமுல்படுத்துவதும் இதன் பிரதான நோக்கமாகும்.

# மதுபானசாலைகளுக்கு இரண்டு நாள்கள் பூட்டு

நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து மதுபானசாலைகளும் இரண்டு நாள்களுக்கு மூடப்படும் என மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மதுவரித் திணைக்கள ஆணையாளர் எம்.ஜே.குணசிறி இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் காரணமாக நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து மதுபானசாலைகளும் மூடப்படும் என மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி, எதிர்வரும் 21 மற்றும் 22 ஆம் திகதிகளில் மதுபானசாலைகள் மூடப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.



# இன்றைய ராசி பலன்கள் - 15.09.2024




இன்று சாதாரணமான நாள். நீங்கள் பெரியவர்களைக் கூட மகிழ்விக்கும் இனிமையான வார்த்தைகளை பேசுவீர்கள். இறை மந்திரங்கள் சொல்வது இசை கேட்பது மன ஆறுதலை அளிக்கும்.

பணி நிமித்தமான பயணம் காணப்படுகின்றது. உங்களுக்கு புதிய பணிகள் கொடுக்கப்படும். அது சவால்கள் நிறைந்ததாக இருக்கும்.

உங்கள் தந்தையுடன் நல்லுறவு பராமரிப்பீர்கள். குடும்ப அங்கத்தினர்களின் நல்லாதரவு பெறுவீர்கள். இன்று காதலர்களுக்கு உகந்த நாள் அல்ல.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். இன்று கணிசமான தொகை பராமரிப்பீர்கள்.

ஆரோக்கியம் பொதுவாக சிறப்பாக இருக்கும். இன்று நீங்கள் சிறந்த ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




உங்கள் செயல்களை சீராக மேற் கொள்வதில் நீங்கள் வெற்றி பெறுவீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பது நல்லது.

உங்கள் பணிகள் பாராட்டைப் பெறும். உங்கள் பணிகளை நீங்கள் அனுசரித்து கவனமாக மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையுடன் சிறப்பான நேரத்தை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் காதலருடன் உங்கள் வாழ்கைக்கு திட்டமிடும் நாள்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். நீங்கள் பணத்தை சேமிக்க இயலும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் நம்பிக்கை எண்ணம் காணப்படும். இது உங்கள் ஆரோக்கியத்தில் பிரதி பலிக்கும்.




ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு ஆறுதலை பெற்றுத் தரும். புனித யாத்திரை ஒன்றை மேற்கொள்வீர்கள். அது உங்களுக்கு திருப்தி உணர்வை அளிக்கும்.

நீங்கள் மிகவும் சிறப்பாக பணியாற் றுவீர்கள். உங்கள் முயற்சிக்கு அங்கீகாரமும் பாராட்டும் கிடைக்கும்.

இன்று காதலுக்கு உகந்த நாள். உங்கள் துணையுடன் அன்பாக இருப்பீர்கள். உங்கள் உறவி னர்களிடம் கலந்தாலோசித்து உங்கள் திருமணத் துக்காகத் திட்டமிடலாம்.

நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். நீங்கள் பணத்தை சேமிக்கும் நிலையில் இருப்பீர்கள்.

இன்று ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சனையும் காணப்படாது. ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்றைய நாள் சராசரிக்கும் அதிக மான பலன்களை அளிக்கும். உங்கள் புத்திசாலித்தனத்தை நன்கு பயன்படுத்து வீர்கள். உங்கள் தரத்தை மேம்படுத்தவும் வெற்றி பெறவும் நீங்கள் முயற்சி எடுக்கலாம்.

பணி நிமித்தமான பயணம் காணப்படுகின்றது. நீங் கள் உங்கள் பணியில் மும்முரமாக ஈடுபட்டிருப்பீர்கள்.

உங்கள் துணையை சந்தித்து உங்கள் உறவை மேம் படுத்த முயல்வீர்கள். உங்கள் துணையுடன் வெளிப்படையக இனிமையான வார்த்தைகளை பேசுவது சிறந்தது.

நீங்கள் சம்பாதித்த பணத்தை ஆன்மீகக் காரியங்களுக்காக பயன்படுத்துவீர்கள். இதன் மூலம் மனதிருப்தியை அடைவீர்கள்.ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் இருக்காது.




இன்று சுறுசுறுப்பாக காணப்படு வீர்கள். வெற்றி காண கடினமாக உழைக்க வேண்டும். சிறந்த தகவல் தொடர்பாடல் மூலம் நீங்கள் நல்ல பலனைப் பெறலாம்.

பணியிடச் சூழல் இன்று சிறப்பாக இருக்கும். உங்கள் பேச்சின் மூலம் சிறந்த வளர்ச்சி பெறுவீர்கள். இது உங்களுக்கு வழிகாட்ட உதவும்.

இன்று கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்புள்ளது என்பதால் காதலுக்கு உகந்த நாள் அல்ல. காதல் பாதிக்காமல் இருக்கவும் நன்கு வளரவும் புரிந்துணர்வு அவசியம்.வரவு செலவு இரண்டும் இணைந்து காணப்படும். வருவதைக் கொண்டு நிர்வகிக்க வேண்டும்.பதற்றம் காரணமாக தோள் வலி மற்றும் எரிச்சல் காணப்படும். மருத்துவ பரிசோதனை மேற்கொள்வது சிறந்தது.




வெற்றி பெறுவதற்கான தைரியமும் உறுதியும் உங்களிடம் காணப்படும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும்.

உங்கள் பணிகளை திறமையுடன் ஆற்றுவீர்கள். உங்கள் சக பணியாளர்க ளுடன் நல்லுறவு பராமரிப்பீர்கள்.

காதலில் அன்பு மிகுந்து காணப்படும். உங்கள் துணையுடன் உங்கள் எதிர் கால வாழ்க்கைக்கு திட்டமிட உகந்த நாள்.

இன்று பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். உங்கள் கடின உழைப்பிற்கு நீங்கள் ஊக்கத் தொகை பெறுவீர்கள்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் இருக்காது.




இன்று மிகவும் சிறப்பான நாளாக காணப்படாது. இன்று உங்கள் செயல் களை சிறப்பாக திட்டமிட வேண்டும். எந்த செயலையும் செய்வதற்கு முன் நன்கு யோசிக்க வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். எதற்கும் உணர்ச்சி வசப்படாதீர்கள்.

பணியிடச் சூழல் மகிழ்ச்சிகரமாக இருக்காது. நீங்கள் அதிக பணிகளை சுமக்க நேரும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

உங்கள் காதலை வெளிபடுத்த இது உகந்த நாள் அல்ல. உங்கள் துணையுடன் இன்று அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று நிதி வளர்ச்சி மகிழ்ச்சிகரமாக காணப்படாது. இன்று அதிக செலவுகள் காணப்படும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

ஆரோக்கியத்தைப் பொறுத்தவரை மிகவும் கவனம் தேவை. கால் வலி மற்றும் பதட்டம் சம்பந்தமான பிரச்சினைகளை எதிர்கொள்வீர்கள்.




இன்று சற்று மந்தமான நாள். எந்த முடிவையும் எடுப்பதற்கு முன் யோசிக்க வேண்டும். பலன்கள் நீங்கள் எதிர்பார்த்தபடி காணப்படாது. நீங்கள் பொறுமையாக இருக்க வேண்டும்.

உங்கள் பணிகளை மேற்கொள் வதில் தாமதம் காணப்படும். அதிகப் பணிகள் மற்றும் கவனக் குறைவே இதற்குக் காரணம்.

உங்கள் கருத்துக்களை பகிர்ந்து கொள்வதை கடினமாக உணர்வீர்கள். உங்கள் காதலருடன் சண்டை ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் துணையிடம் வெளிப் படையாக அணுகுங்கள்.

இன்று பண விரயம் காணப்படும். தேவையற்ற செலவுகள் செய்ய நேரும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 15.09.2024

## தனுசு

எதிர்பாராத வகையில் நன்மை கிடைபதற்கான வாய்ப்புள்ள நாள். இன்றைய சூழ்நிலைகள் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

இன்று பணியில் உங்கள் சக பணியாளர்களின் ஆதரவைப் பெறுவீர்கள். நீங்கள் மிகவும் கவனமுடன் பணியாற்றுவீர்கள்.

இன்று உங்கள் காதலருடன் திருமணம் நடக்க வாய்ப்புள்ளது. என்றாலும் சரியான பாதையில் முயற்சிக்க வேண்டும்.

இன்று பணப்புழக்கம் அதிகமாக இருக்கும். நீங்கள் பணத்தை சேமிப்பீர்கள்.

இன்று முழுவதும் நீங்கள் ஆரோக்கியமாக இருப்பீர்கள்.

## மகரம்

இன்று சராசரிக்கும் அதிகமான பலன்கள் கிடைக்கும். ஆன்மீக ஈடுபாட்டின் மூலம் நீங்கள் மன திருப்தி பெற இயலும்.

உங்களின் பணிகள் எந்த தடையும் இல்லாமல் நடக்க இன்று நீங்கள் பொறுமையை இழக்காமல் புத்திசாலித்தனத்துடன் செயல் பட வேண்டியது அவசியம்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியான அனுபவமாக இருக்கும்.

பங்கு வர்த்தகம் போன்ற புதிய முதலீடுகள் திருப்தி அளிக்கும். இவற்றின் மூலம் திருப்தியான பண வரவு காணப்படும்.

இன்று நீங்கள் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.

## கும்பம்

இன்று உங்களுக்கு சுமாரான பலன்கள் கிடைக்கும். உங்கள் மனதில் தேவையற்ற குழப்பங்கள் காணப்படும். இன்று அனுசரித்துப் போவது நல்லது. எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

நீங்கள் இன்று சிறப்பாக பணியாற்றுவீர்கள். என்றாலும் சக பணியாளர்களுடன் வாக்குவாதங்களில் ஈடுபடுவதை தவிர்ப்பது நல்லது.

உங்கள் காதலருடன் இனிமையான தருணமாக காணப்படாது. வாக்குவாதம் எழ வாய்ப்புள்ளது.

நிதி நிலைமையில் மிதமான வளர்ச்சி காணப்படும். இன்று வரவு செலவு இரண்டும் இணைந்து காணப்படும்.

ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் இருக்காது. நீங்கள் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.

## மீனம்

இன்று மந்தமான நாளாக இருக்கும். உங்கள் உணர்ச்சி மற்றும் உணர்வுகளை கட்டுப்படுத்த வேண்டும். பொறுமையுடனும் நம்பிக்கையுடனும் இருக்க வேண்டும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். உங்கள் பணிகளை கவனமாக முடிக்க நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக் கொடுக்க நேரும்.

இன்று காதலுக்கு உகந்த நாள் அல்ல. உங்கள் தாயுடன் கருத்து வேற்றுமை ஏற்படலாம்.

பணப்புழக்கம் போதிய அளவு காணப்படாது. நீங்கள் தேவையற்ற செலவுகளை செய்வீர்கள். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

இன்று சில அசௌகரியங்கள் காணப்படும். இது உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும். தூக்கமின்மை பாதிப்பு அல்லது தோல் பிரச்சினை ஏற்பட வாய்ப்புள்ளது.











# Lanka Ratings Agency இடமிருந்து; மக்கள் வங்கிக்கு AA தரப்படுத்தல்

மக்கள் வங்கி, இலங்கையிலுள்ள முன்னணி நிதி நிறுவனம் என்ற அந்தஸ்தை மீள உறுதிப்படுத்தும் வகையில், இடமிருந்து பெருமதிப்பிற்குரிய AA தரப்படுத்தலைப் பெற்றுள்ளது.

வங்கியின் வலுவான நிதியியல் அத்திவாரம், வலுவான மூலதனமயமாக்கம் மற்றும் விவேகமான முகாமைத்துவம் ஆகியவற்றை இத்தரப்படுத்தல் பிரதிபலிப்பதுடன், இவை அனைத்தும் ஒன்றுசேர்ந்து வங்கி தனது வாடிக்கையாளர்கள், தொடர்புபட்ட தரப்பினர் மற்றும் பொது மக்களின் நம்பிக்கையைப் பேணுவதற்குப் பங்களித்துள்ளன.

சவால்மிக்கதொரு பொருளாதார சூழலுக்கு மத்தியிலும் இத்தரப்படுத்தலை அடையப்பெறுவது என்பது, மகத்துவம் மற்றும் ஸ்திரத்தன்மை ஆகியவற்றின் மீது மக்கள் வங்கி கொண்டுள்ள ஓயாத அர்ப்பணிப்பிற்கு சான்றாக உள்ளது.

மக்கள் வங்கியின் AA தரப்படுத்தல், தொழிற்துறையின் மொத்த சொத்துக்களில் 14 வீதத்திற்கு மேற்பட்ட மற்றும் துறையின் மொத்த முற்பணங்களில் 17 வீதத்திற்கு மேற்பட்ட பங்கினைப் பிரதிநிதித்துவம் செய்தவாறு, வங்கித்துறையில் அதன் கணிசமான சந்தைப்பங்கினால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு கட்டமைப்பு முக்கியத்துவம் கொண்ட ஒரு வங்கி என்ற ரீதியில், தனிநபர்கள், வணிகங்கள் மற்றும் அரச நிறுவனங்களுக்கு பாதுகாப்பான மற்றும் நம்பகமான வங்கிச்சேவைகளை வழங்கும் தெளிவான அர்ப்பணிப்புடன், நாட்டின் நிதிக் கட்டமைப்பில் மக்கள் வங்கி முக்கிய வகிபாகத்தைக் கொண்டுள்ளது.

2024 மார்ச் முடிவில் 257 வீதம் என்ற திரவத்தன்மை உள்ளடக்க விகிதத்தில் குறிப்பிடத்தக்க மேம்பாட்டுடன், வங்கியின் வலுவான திரவத்தன்மை நிலைமையானது சவால்மிக்க சந்தை சூழ்நிலைகள் மத்தியில் அதன் நெகிழ்திறனைப் பிரதிபலிக்கின்றது.

மேலும், நாணயப்பரிமாற்ற வீதங்களின் ஆபத்துக்களை நிர்வகித்தல், பன்முகப்பட்ட கடன் துறைளைப் பேணுதல், மற்றும் அரசாங்க பிணையங்கள் மீது கவனம் செலுத்துதல் ஆகியவற்றில் மக்கள் வங்கியின் முற்கூட்டிய செயலூக்க அணுகுமுறையானது அதன் நிதியியல் வலிமையை மேலும் மேம்படுத்தியுள்ளது.

இச்சாதனை குறித்து மக்கள் வங்கியின் தலைவர் சுஜீவ ராஜபக்ஷ அவர்கள் கருத்து வெளியிடுகையில்,

"இலங்கையிலுள்ள மிகவும் நம்பிக்கைக்குரிய நிதி நிறுவனங்களில் ஒன்று என்ற மக்கள் வங்கியின் ஸ்தானத்தை வெளிக்காண்பிக்கும் வகையில், LRA இடமிருந்து யுயு தரப்படுத்ததலைப் பெற்றுள்ளமை எமக்கு மிகவும் பெருமையளிக்கின்றது.

எமது பெரும்பான்மை அரச உடமை மற்றும் எமது விவேகமான இடர் முகாமைத்துவ நடைமுறைகள் ஆகியன இணைந்து, எமது வாடிக்கையாளர்களுக்கு தொடர்ந்து நிதியியல் பாதுகாப்பு மற்றும் மன நிம்மதியை வழங்க எமக்கு இடமளிக்கின்றன. எமது மூலதனத் தளத்தை வலுப்படுத்தி, வங்கியின் நீண்ட கால நிதியியல் நிலைபேற்றியலை மேம்படுத்துவதில் நாம் தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் உள்ளோம்," என்று குறிப்பிட்டார்.

மக்கள் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி / பொது முகாமையாளர் கிளைவ் பொன்சேகா கருத்து வெளியிடுகையில்,

"இந்த AA தரப்படுத்தலானது எமது அணியின் அர்ப்பணிப்பு மற்றும் கடின உழைப்பையும், வங்கியின் நிதியியல் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதில் எமது மூலோபாய ரீதியான இலக்கினையும் பிரதிபலிக்கின்றது. வலுவான திரவத்தன்மை நிலைமையையும், பன்முகப்பட்ட வைப்புத் தளத்தையும் நாம் தொடர்ச்சியாக பேணி வந்துள்ளமை, பொருளாதார சவால்களுக்கு வெற்றிகரமாக முகங்கொடுக்க எமக்கு இடமளித்துள்ளதுடன், எமது வாடிக்கையாளர்களுக்கு நம்பகமான மற்றும் புத்தாக்கமான வங்கித் தீர்வுகளை தொடர்ந்தும் வழங்கவும் வழிவகுத்துள்ளது.

எமது வாடிக்கையாளர்களுடனான உறவுமுறைகளை வளர்த்து, வங்கியின் பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மையை உறுதி செய்வதில் நாம் தொடர்ந்தும் கவனம் செலுத்தி வருகின்றோம்," என்று குறிப்பிட்டார்.








# செலான் வங்கி ஏற்றுமதியாளர் சம்மேளனத்துடனான தனது மூலோபாய இணைவை புதுப்பித்துள்ளது

செலான் வங்கியானது தேசிய ஏற்றுமதியாளர் சம்மேளனத்துடன் (NCE) தொடர்ந்து 3ஆவது ஆண்டாக தமது இணைவை புதுப்பித்துள்ளது.

இந்த ஒப்பந்தம் 2024, ஆகஸ்ட் 15ஆம் திகதி செலான் வங்கியின் தலைமை அலுவலகத்தில், இரு நிறுவனங்களின் சிரேஷ்ட அதிகாரிகள் முன்னிலையில் கைச்சாத்திடப்பட்டது.

அனைத்து தயாரிப்புகள் மற்றும் சேவைத் துறைகளின் முன்னணி ஏற்றுமதியாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும், NCE உடனான இந்த இணைவு, சம்மேளன உறுப்பினர்களுக்கு செலான் வங்கியின் நிதி வசதிகளை வழங்க உதவுகிறது.

இதன் விளைவாக, தங்கள் ஏற்றுமதியை அதிகரிக்க, சந்தைப் பங்கை விரிவுபடுத்த அல்லது அவற்றின் செயற்பாடுகளுக்கு மதிப்பு சேர்க்க முயல்கின்ற பெரிய அளவிலான வணிகங்கள் முதல் சிறிய மற்றும் நடுத்தர வணிகங்கள் (SMEகள்) வரையிலான உள்ளூர் நிறுவனங்களுக்கு சர்வதேச சந்தைகளில் காலூன்றுவதற்கான சந்தர்ப்பம் கிட்டுகிறது.

நாட்டின் சமூக -பொருளாதார சவால்களை எதிர்கொள்வதையும் நிலையான வளர்ச்சியை ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்ட இவ்விணைவு, நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கும் அதன் நெகிழ்வுத்தன்மையை மேம்படுத்துவதற்கும் ஒரு தளமாக அமைகிறது.

குறிப்பாக ளுஆநு ஏற்றுமதியாளர்களை மேம்படுத்துவதன் மூலம் நாட்டின் அந்நிய செலவாணியை அதிகரிப்பதற்கான வாய்ப்பை இது வழங்குகிறது.

நாட்டின் பொருளாதார வளர்ச்சி மற்றும் நிதிச் சேவைகளை உயர்த்துவதற்கு இரு தரப்பினரதும் அர்ப்பணிப்பை இந்த இணைவு மீண்டும் உறுதிப்படுத்துகிறது.

தேசிய ஏற்றுமதியாளர் சம்மேளனத்துடன் இணைந்து பணியாற்றுவதன் மூலம் பல்வேறு துறைகளில் உள்ள ஏற்றுமதியாளர்களுக்கு தொழிற்படத்தகு சூழலையும் செழிப்பான எதிர்காலத்தையும் உருவாக்குவதை ஆதரிப்பதே இதன் இலக்காகும்.

இணைவு குறித்து கருத்து தெரிவித்த செலான் வங்கியின் பணிப்பாளர்ஃ பிரதம நிறைவேற்று அதிகாரி ரமேஷ் ஜயசேகர,

“தேசிய ஏற்றுமதியாளர் சம்மேளனத்துடனான எங்கள் இணைவை புதுப்பிப்பதில் மகிழ்ச்சியடைகிறோம். எங்களுடைய முதல் இணைவிலிருந்து, ஏற்றுமதியை மேம்படுத்துவதற்காக எங்கள் கூட்டு முயற்சிகளை அர்ப்பணித்துள்ளோம். இலங்கையின் ஏற்றுமதிச் சந்தையானது சர்வதேச அரங்கில் தமது நிலைப்பாட்டை உறுதி செய்யவும் விஸ்தரிக்கவும் இந்த இணைவு மேலும் உதவுகிறது. சர்வதேச சந்தைகளில் தங்கள் நிலைப்பாட்டை உறுதிபடுத்த முயலும் ஏற்றுமதி சார்ந்த நிறுவனங்களுக்கு கிடைக்கும் சேவைகளின் எல்லைகளை விரிவுபடுத்துவதற்கு மேலும் ஓர் ஆண்டிற்கு நாங்கள் எதிர்பார்க்கிறோம்.” எனத் தெரிவித்தார்.




# மிகவும் விரும்பப்படும் காப்புறுதி வழங்குநராக கௌரவிக்கப்பட்டுள்ள AIA இன்ஷூரன்ஸ்

AIA இன்ஷூரன்ஸ் இலங்கையில் மிகவும் விரும்பப்படும் ஆயுள் காப்புறுதி வர்த்தக நாமங்களில் ஒன்றாக தனது அங்கீகாரத்தை அறிவிப்பதில் மிகவும் பெருமிதம் கொள்கின்றது. இதற்கான கருத்தாய்வினை முன்னெடுப்பதற்காக நியமிக்கப்பட்ட பெபர்கியூப் கென்சல்டன்ஸ் நிறுவனத்தினால் (PepperCube) மேற்கொள்ளப்பட்டிருந்த பரிபூரணமான தரவின் அடிப்படையில் LMD இனால் வழங்கப்பட்ட இப்பாராட்டானது AIA இன்ஷூரன்ஸ் நிறுவனத்தின் மிகவும் குறிப்பிடத்தக்க முக்கிய மைல்கல்லினை அடையாளப்படுத்திப் பறைசாற்றுகின்றது.

எங்களின் மிகச்சிறந்த அர்ப்பணிப்பினால் இப்பயணம் வழிகாட்டப்படுவதுடன் எங்கள் வாடிக்கையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் அசைக்க முடியாத கவனத்தினையும் செலுத்துகின்றது.

பெருநிறுவன வர்த்தக நாமப் பிரிவில் மிகவும் விரும்பப்படும் காப்புறுதி வழங்குநராக AIA பெயரிடப்பட்டுள்ளதானது, இலங்கையர்கள் எங்கள் மீது வைத்திருக்கும் நம்பிக்கை மற்றும் அதிகப்படியான அன்பிற்கான சான்றாகவே உள்ளது.

எங்கள் காப்புறுதிதாரர்களுக்கு இணையற்ற சேவை மற்றும் ஆதரவை வழங்குவதற்கான எங்கள் முயற்சிகளின் சரிபார்ப்பானது அவர்களின் நிதிப் பாதுகாப்பு மற்றும் மன நிம்மதியினை மிகவும் உறுதி செய்கின்றது.

"இலங்கையில் உள்ள அனைவரும் எங்கள் மீது மிகுந்த அன்பினைப் பொழிவதற்கு நாங்கள் உண்மையிலேயே மிகவும் பாக்கியம் பெற்றவர்களாகவே எங்களைக் கருதுகின்றோம்" என யுஐயு இன்சூரன்ஸ் நிறுவனத்தின் பிரதான சந்தைப்படுத்தல் அதிகாரி சசித் பம்பரதெனிய




கருத்துத் தெரிவித்திருந்திருந்தார்.

"இச்சாதனையானது எங்கள் வாடிக்கையாளர்களுடன் நாங்கள் கட்டியெழுப்பியுள்ள வலுவான பிணைப்பின் பிரதிபலிப்பாகவே உள்ளதோடு தொடர்ந்து மிகச்சிறந்த சேவையினை வழங்குவதற்கான எங்கள் குழுவின் அர்ப்பணிப்பினையும் பறைசாற்றுகின்றது. அனைத்து இலங்கையர்களின் நல்வாழ்வை மேம்படுத்தும் மற்றும் ஆதரிக்கும் முயற்சிகளில் நாங்கள் தொடர்ந்தும் ஈடுபடுவதுடன் எங்களின் சேவையினைக் கிடைக்கச் செய்யும் மக்கள் மத்தியில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துவதற்கும் சமமான அர்ப்பணிப்புடன் நாங்கள் பணியாற்றுகின்றோம்.

AIA மீது தங்கள் அன்பினையும் நம்பிக்கையினையும் வைத்துள்ள அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியினை இவ்விடத்தில் நாங்கள் தெரிவித்துக் கொள்கின்றோம்" என மேலும் அவர் கருத்துத் தெரிவித்திருந்தார்.

# மக்கள் வங்கி டிஜிட்டல் வங்கிச்சேவையில் தலைமைத்துவத்தை திடப்படுத்தியுள்ளது




இலங்கையில் வங்கிச்சேவை மற்றும் நிதியியல் துறையில் முன்னிலைச் சக்தியாகத் திகழ்ந்து வருகின்ற மக்கள் வங்கி, தனது டிஜிட்டல் தளங்களில் 3 மில்லியனுக்கும் மேற்பட்ட வாடிக்கையாளர் பதிவுகளைக் கடந்து, டிஜிட்டல் மகத்துவத்தில் தான் கொண்டுள்ள அர்ப்பணிப்பை மீண்டும் வெளிக்காண்பித்துள்ளது.

அதன் புத்தாக்கமான இணைய வங்கிச்சேவைகள், மொபைல் வங்கிச்சேவை செயலிகள் (app) மற்றும் வோலட் (wallet) தீர்வுகள் ஆகியவற்றினூடாக, சௌகரியம், பாதுகாப்பு மற்றும் அணுகக்கூடிய வங்கிச்சேவை ஆகியவற்றின் தராதரங் களை மக்கள் வங்கி மேம்படுத்தி வருகின்றது.

"எமது இணைய வங்கிச்சேவைதளங்கள் மற்றும் மொபைல் செயலிகள் ஆகியன வாடிக்கையாளர் சௌகரியம், பாதுகாப்பு மற்றும் அணுகக்கூடிய தன்மை ஆகியவற்றை மனதில் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளதுடன், பரவலாக பிரபலமடைந்துள்ளமைக்கு அவை பங்களித்துள்ளன," என்று மக்கள் வங்கியின் தலைவர் சுஜீவ ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

"வாடிக்கையாளர்களின் தேவைகளுக்கு தீர்வாக, இலகுவான திறன்மிக்க மற்றும் நிகழ்நேர தீர்வுகளை வழங்கி, இலங்கையில் வங்கித்துறையின் பரிமாண வளர்ச்சியை முன்னின்று வழிநடாத்திச் செல்வதையிட்டு நாம் பெருமை கொள்கின்றோம்," என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

மக்கள் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி /பொது முகாமையாளர் கிளைவ் பொன்சேகா இச்சாதனை இலக்கின் முக்கியத்துவம் குறித்து தெரிவிக்கையில்,

"3 மில்லியனுக்கும் மேற்பட்ட பதிவுகளுடன், எமது வாடிக்கையாளர்களிடமிருந்து கிடைக்கப்பெற்றுள்ள வலுவான வரவேற்பு, எமது டிஜிட்டல் வங்கிச்சேவை மூலோபாயத்தின் திறனுக்கு சான்றாக உள்ளது. தமது விருப்பத்திற்குரிய வங்கிச் சேவை கூட்டாளராக, மக்கள் வங்கியின் மீது நம்பிக்கை வைத்துள்ள எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் நாம் நன்றிக்கடன்பட்டுள்ளோம்," என்று குறிப்பிட்டார்.




# டயலொக் - MAS ஒன்றிணைந்து ‘Enabler செயற்றிட்டம் 2024’




இலங்கையின் சூ1 இணைப்பு வழங்குனரான டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி மற்றும் ஆடை உற்பத்தி மற்றும் தொழில்நுட்ப பன்கூட்டு நிறுவனமான MAS Holdings உடன் இணைந்து Dialog MAS Enabler செயற்றிட்டம் 2024 இனை வெற்றிகரமாக நிறைவு செய்தன. இது மாற்றுத்திறனாளிகளுக்கு வலுவூட்டி அவர்களின் உள்ளிணைக்கையை (inclusive) வளமூட்டுகிறது.

இச்செயற்றிட்டம் முதலில் 2023 இல் முன்னெடுக்கப்பட்டது. செயற்றிட்டத்தின் இரண்டாம் அத்தியாயம் 2024 ஜூலை 15ஆம் திகதி நடாத்தப்பட்டது. மாற்றுத்திறனாளிகளுக்கான வேலை வாய்ப்புகளை கணிசமாக உயர்த்தும் வகையில் இது வடிவமைக்கப்பட்டிருந்தது. அவர்களுக்கு பணியிடத்தின் நேரடி அனுபவத்தை அளித்தல் மற்றும் தகவுள்ள வேலை வாய்ப்பளிப்போருக்கு தமது பணியாட்களில் மாற்றுத்திறனாளிகளை பணிக்கமர்த்துவதால் விளையும் நன்மைகள் குறித்து அறிவூட்டல் ஆகியன இதன்போது நிகழ்ந்தன.

14 பல்கலைக்கழக மாணவர்கள், பட்டதாரிகள், தொழில்முறை மற்றும் வாழ்க்கைத்தொழில்சார் தேர்ச்சிகளுக்காக பயிலும் மாணவர்களுக்கு ஒரு விரிவான கூட்டுத்தாபன உள்வாங்கல் செயற்றிட்டத்தினூடாக பணியிட கலாச்சாரம் குறித்த அறிமுகத்தை நேரடியாக பெற்றனர்.

கற்றலுக்கும் கற்றதை பிரயோகிப்பதற்கும் இடையிலான இடைவெளிக்கு இச்செயற்றிட்டம் ஒரு வழிவகையாய் அமைந்தது. மேலும் செயற்றிட்டத்தின் மூலம் தகவுள்ள பணிக்கமர்த்துவோருக்கு இயலாமையுடையோரை பணிக்கமர்த்துவதால் விளையும் நன்மைகள் குறித்து விழிப்புணர்வு அளிக்கப்பட்டது. பொதுப்படையான கருத்துக்களை சவாலுக்குட்படுத்தி பணிக்கமர்த்தல் நடைமுறைகளில் உள்ளிணைக்கை (inclusivity) ஊக்குவிக்கப்பட்டது.

செயற்றிட்டத்தின் முழுக் காலப்பகுதியில், பங்கேற்பாளர்கள் ஒரு வாரம் டயலொக்கிலும் மற்றொரு வாரம் MAS இலும் பணியாற்றினர், கூட்டுத்தாபன அலுவலகங்கள், உற்பத்தி அலகுகள் மற்றும் வாடிக்கையாளர் சேவைகள் நிலையங்களில் பங்கேற்று, நிறுவன இயக்கத்தின் பல்வேறு அம்சங்களைப் பற்றிய முக்கியமான தகவல்களைப் பெற்றனர்.

நிறுவன சூழலுக்கு மாறுதல் அடைவதை எளிதாக்குவதற்காக, பங்கேற்பாளர்களுக்கு நிறுவன கலாச்சாரம் குறித்த கருத்துரைகள் வழங்கப்பட்டன. ஒவ்வொரு அமர்வும் கோட்பாட்டுப் பயிற்சிகளும், நடைமுறை அனுபவங்களும் கலந்தே நிகழ்ந்தது, இதன் மூலம் பங்கேற்பாளர்கள் நிறுவன இயக்கத்தின் மாறுபாடுகளைப் புரிந்து கொண்டு, தொழில்முறை வளர்ச்சிக்கு தேவையான திறன்களைப் பெற முடிந்தது. நிகழ்ச்சி, பங்கேற்பாளர்கள் தங்கள் கற்றல்களை மற்றும் பரிந்துரைகளை டயலொக் மற்றும் MAS நிறுவனங்களுடன் பகிர்ந்து கொண்ட தொகுப்புகளுடன் நிறைவடைந்தது, இது வேலைத்தளத்தில் இணக்கத்தை மேம்படுத்துவதற்கான மேலதிக உந்துதலை வழங்குகிறது.

டயலொக் ஆசிஆட்டா பி.எல்.சியின் நிலைபேற்றுத் தன்மைப் பிரிவு தலைவர் மற்றும் குழும இடர் மற்றும் இணக்கப்பாடு பிரதானி அசங்க பிரியதர்ஷன கருத்து தெரிவிக்கையில்,

“MAS உடன் உள்நாட்டு வேலைத்தளத்தில் ஒட்டுமொத்தமாகவும், வெளிப்படையான தீர்வுகளை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்வதற்கு அளித்த மதிப்புமிக்க ஒத்துழைப்பிற்கும், உறுதியான அர்ப்பணிப்பிற்கும் எங்களது மனமார்ந்த நன்றிகளை தெரிவிக்கின்றோம்.

இந்த முன்னெடுப்பு, பன்முகத்தன்மையிலும், இணக்கத்தின் மாற்றத்தை ஏற்படுத்தும் சக்தியில் நாங்கள் கொண்டுள்ள நம்பிக்கையை வலியுறுத்துகிறது. இதன் மூலம் பொதுப்படை கருத்துக்களை சவால்களுக்கு உட்படுத்தி, நிறுவன அமைப்பில் அர்த்தமுள்ள மாற்றத்தை ஏற்படுத்தும் வழிகளை அமைக்க முடிகிறது. குறைந்தபட்ச இயலாமை உடையவர்களுக்கு வலுவூட்டுவதனுடன், அனைத்து மக்களிடத்திலும் பன்முகத்தன்மை என்பது நிறுவன சிறப்பிற்கும் சமூக முன்னேற்றத்திற்கும் ஒரு அடிப்படை கொள்கை என்பதை கற்றுக்கொடுத்து, ஊக்குவிக்கும் முயற்சிகளில் முன்னோடியாக இருப்பதற்காக நாங்கள் பெருமைப்படுகிறோம்.” – என்றார்.

MAS Holdings குழுமத்தின் நிலைபேறான வணிக பணிப்பாளர் நெமந்தி கூரகமகே கருத்து தெரிவிக்கையில்,

“கடந்த 35 ஆண்டுகளாக MAS ஆனது எமது பல்வகைமைமிக்க பணியாட்களுக்கு ஏற்ற உள்ளிணைக்கைமிகு பணியிடங்களை (inclusive work places) உருவாக்கும் நோக்குடன் இயங்கிவருகிறது. இந்த விடயம் தொடர்பாக துறையில் உள்ள சிறந்த நடைமுறைகளைக் கொண்டு ஆட்சேர்ப்பு, ஆற்றலளிப்பு, ஈடுபாடு, அதிகாரமளிப்பு ஆகிய நால்வகை பகுதிகளில் கவனத்தை செலுத்துவதன் மூலம் மாற்றுத்திறன் கொண்ட சக ஊழியர்களை வலுப்பெறச்செய்வது எமது பணியாகும். நாம் Dialog MAS Enabler செயற்றிட்டத்தின் முதல் வருடம் கற்றுக்கொண்ட பாடங்களை மனமாற ஏற்றுக்கொண்டு இவ்வாண்டு வரும் மாணவர்களுக்கு மேம்பட்ட விடயங்களை அளிப்பதோடு, எதிர்காலத்தில் வளர்ந்துவரும் பணியாட்களுக்கு ஏற்புடையனவற்றை அளிக்கும் வகையில் எம்மை தயார்செய்து வருகிறோம்.” – என்றார்.